بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

# Weekly BADAR Qadian Tamil

**தொகுதி** 9

**இதழ்** 16 & 17

ஆசிரியர் **முஸ்ஸம்மில் அஹ்மது**

துணை ஆசிரியர் **அப்தூர் ரஹ்மான் தாஹிர்**

**வருடாந்திர சந்தா** ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 ஷவ்வால் 09 - 16★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - ஷஹாதத் 18 -25 ★ 18 -25 ஏப்ரல் 2024


## அல்லாஹ்வின் கட்டளை

وَبِالۡحَقِّ اَنۡزَلۡنٰهُ وَبِالۡحَقِّ نَزَلَ ؕ وَمَاۤ اَرۡسَلۡنٰكَ اِلَّا مُبَشِّرًا وَّنَذِيۡرًا ۘ‏ ﴿۱۰۶﴾

நாம் இந்தக் குர்ஆனை உண்மையை(யும் நுட்பமான ஞானத்தையும்) கொண்டே இறக்கினோம். உண்மையை(யும் நுட்பமான ஞானத்தையும்) கொண்டே இது இறங்கியுள்ளது. நாம் உம்மை நற்செய்தி வழங்குபவராகவும், (தண்டனையைப் பற்றி) எச்சரிப்பவராகவுமே அனுப்பியுள்ளோம். (பனீ இஸ்ராயீல்: 106)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹூல்லாஹூத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹூஸீர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹூஸீர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**உங்களது தைரியம் மற்றும் முயற்சியின் மீது பெருமை கொள்ளாதீர்கள். இந்த வெற்றி நமது ஒரு திறமை மற்றும் உழைப்பின் விளைவாகும் என்று கருதாதீர்கள் மாறாக எவருடைய உண்மையான முயற்சியையும் வீணாக்காத அந்த கருணை மிக்க இறைவன் நமது உழைப்பிற்கு கனி வழங்கினான் என்று சிந்தியுங்கள்**

**எனது ஈமான் இதுவே ஆகும். அதாவது மனிதன் உலகில் எல்லா வகையான இழிவிலிருந்தும், கடினத்திலிருந்தும் தப்பிக்க விரும்புகின்றான் என்றால் பின்னர் அவனுக்கு ஒரே வழிதான் உள்ளது.**

**அதாவது அவன் இறையச்சமுடையவராக ஆகிவிட வேண்டும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹூம் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### உலகியல் வெற்றிகளும் மகிழ்ச்சிகளும் நிரந்தரமானவை கிடையாது

எல்லா வகையான வெற்றியின் சந்தர்ப்பத்தின்போதும் மனிதனுக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. திருக்குர்ஆனிலிருந்து மூன்று வகையான மகிழ்ச்சிகளும், கேளிக்கைகளும், பெருமிதங்களும் தெரிய வருகின்றன. லஹூ என்பதில் உணவுப் பொருட்கள் அடங்கும். மேலும் லஅப் என்பதில் திருமணம் போன்ற மகிழ்ச்சிகளும், தஃபாகுர் என்பதில் செல்வம் போன்ற மகிழ்ச்சிகளும் அடங்கும். இந்த மூன்று வகையான மகிழ்ச்சிகள் இருக்கின்றன. இவற்றைத் தாண்டி எந்த (உலகியல்) மகிழ்ச்சியும் இல்லை. ஆனால் நினைவிற் கொள்ளுங்கள்! (உலகியல்) வெற்றிகளும், இந்த மகிழ்ச்சிகளும் நிரந்தரமானவை கிடையாது. இன்னும் கூறப்போனால், இவற்றுடன் உள்ளத்தை ஆழ்த்திக் கொள்வது கடினமான பாவமாக இருக்கும். மேலும் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு நேரம் வந்து விடும். அப்போது இந்த மகிழ்ச்சிகளின் காலம் துக்கத்தின் காலமாக மாறத் தொடங்கிவிடும்.

உலகியல் வெற்றிகள் சோதனைகளிலிருந்து வெறுமையானவையாக இருப்பதில்லை. நாம் உங்களை சோதிப்பதற்காகவே மரணம் மற்றும் வாழ்வை படைத்துள்ளோம் என்று திருக்குர்ஆனில் வருகின்றது. (அல்முல்க்: 3) வெற்றி ஒரு வகையான வாழ்வாக இருக்கின்றது. ஒருவருக்கு அவரது வெற்றியின் செய்தி கிடைக்கும்போது அவரிடத்தில் உயிர் வந்து விடுகின்றது. மேலும் ஒருவகையில் அவருக்கு புதிய வாழ்வு கிடைத்து விடுகின்றது. மேலும் ஒருவேளை தோல்விக்கான செய்தி வந்து விட்டால் பின்னர் அவர் உயிருடனேயே மரணித்துவிடுகின்றார். சிலவேளைகளில் ஏராளமான பலவீனமான இதயம் படைத்த மனிதர்கள் (அந்த செய்தியை கேட்ட உடனேயே) மாண்டு விடுகின்றனர்.

இதனையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது பொதுவான வாழ்வும், மரணமும் ஓர் எளிய விவகாரம் ஆகும். ஆனால் நரக வாழ்க்கையும், மரணமும் மிகக் கொடுமையான விஷயம் ஆகும்.நற்பேறு பெற்ற மனிதர் தோல்விக்குப் பிறகு வெற்றியடைந்து மேலும் நற்பேறு பெற்றவராக ஆகிவிடுகின்றார். மேலும் இறைவன் மீதான நம்பிக்கை அவருக்கு மேலும் அதிகரித்து விடுகின்றது. எனது இறைவன் எப்படிப்பட்டவன் ஆவான் என்று அவர் சிந்திக்கும்போது அவருக்கு ஓர் இன்பம் ஏற்படுகின்றது. உலகியல் வெற்றி அவருக்கு இறைவனை அடையாளம் காண்பதற்கான ஒரு காரணியாக ஆகிவிடுகின்றது. அப்படிப்பட்ட நபர்களுக்கு இந்த உலகியல் வெற்றிகள் உண்மையான வெற்றிக்கான ஒரு வழிமுறையாக ஆகிவிடுகின்றன. (அதனை இஸ்லாமிய சொல் வழக்கில் ஃபலாஹ் என்று கூறப்படும்)

நான் உங்களுக்கு மெய்யாகவே கூறுகின்றேன். உண்மையான மகிழ்ச்சியான நிலையும், உண்மையான இன்பமும் உலகம் மற்றும் உலகியல் விஷயங்களால் ஒருபோதும் இல்லை. உண்மை இதுவே ஆகும். அதாவது உலகின் அனைத்துத் துறைகளையும் பார்த்த பிறகும் கூட மனிதன் உண்மையான மற்றும் நிரந்தரமான இன்பத்தை பெற்றுக் கொள்ள முடியாது. செல்வந்தர் அதிக செல்வமும், வசதியும் படைத்திருந்தபோதிலும் எப்போதும் நிம்மதியிழந்து இருப்பதை நீங்கள் பார்க்கக் கூடும். ஆனால், இவர்களின் நிலை ஹர்ப் எனும் ஊரல் நோயாளியைப் போன்ற நிலையாகும். அந்த நோயாளிக்கு சொரிவதன் மூலம் தான் நிம்மதி கிடைக்கின்றது. எனவே இந்த உலகியல் மற்றும் தற்காலிக வெற்றிகளின் மீது உண்மையான வெற்றியிலிருந்து தொலைவில் சென்று விடும் அளவிற்கு நீங்கள் மகிழ்ச்சி அடையாதீர்கள். மாறாக

**தொடர்ச்சி 8ம் பக்கம்....**

## நபிமொழி

### தொழுகையில் வரிசையை நேராக வைக்க வேண்டும்

ஹஸ்ரத் நுஃமான் பின் பஷீர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து இவ்வாறு செவியுற்றேன். நீங்கள் (தொழுகையில்) உங்களது வரிசைகளை நேராக வைக்க வேண்டும். இல்லையென்றால் அல்லாஹ் (அதன் விளைவாக) உங்களது முகங்களிலும், உங்களது உள்ளங்களிலும் கருத்துவேறுபாட்டின் விதையை போட்டுவிடுவான் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். (புகாரி, கிதாபுஸ்ஸலாத்)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் (தொழுகைகளில்) வரிசையை நேராக வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், வரிசைகளை நேராக வைப்பதும் தொழுகையை முழுமை செய்வதின் ஓர் அங்கமாகும். (புகாரீ, கிதாபுஸ் ஸலாத்)

### ஜமாஅத்தான தொழுகையில் இமாம் ஸலாத்திற்கு முன்பே தலையை உயர்த்துவது

ஹஸ்ரத் அபூஹூரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். உங்களில் எந்த நபர் இமாம் ஸலாத்திற்கு முன்பே தலையை உயர்த்தி விடுவாரோ, அவர் இந்த விஷயத்திற்கு அஞ்சுவதில்லையா? அதாவது அல்லாஹ் அவரது தலையை கழுதையின் தலையைப் போன்று ஆக்கிவிடுவான் என்றோ அல்லது அவரது முகத்தை கழுதையைப் போன்றதாக ஆக்கிவிடுவான் என்றோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதாவது அப்படிப்பட்ட நபரின் புரிதலையும், அறிவையும் அல்லாஹ் பறித்து விடுவான். (ஹதீஸ் நூல் முஸ்லிம்- கிதாபுஸ் ஸலாத்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஒவ்வொரு நன்மையின் ஆணிவேர் இறையச்சம் ஆகும். இந்த ஆணிவேர் இருந்தால் பின்னர் அனைத்தும் இருக்கும். நாம் ரமலானின் இந்த சூழலிலிருந்து பயனடைந்தவாறு உண்மையான வழிவில் அல்லாஹ்வின் அருட்களை ஈர்க்கக் கூடியவர்களாக ஆகிவிட்டால் நாம் நற்பேறு பெற்றவர்களாக இருப்போம்**

நோன்பு நோற்பதன் அசல் நோக்கம் இறையச்சத்தை உருவாக்குவது ஆகும். இந்த விஷயம் இல்லையென்றால் பின்னர் நோன்புகளின் நோக்கங்கள் மரணித்துப்போய்விடும்.

ரமலானில் நோன்புகளுக்குரிய உரிமைகளை செலுத்துவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். அசல் நோக்கமான தக்வாவைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஷைத்தானை ஒரு சாதாரண விஷயமாகக் கருதக் கூடாது. அல்லாஹ்வின் அடியார்களின் பெரும்பான்மை எனது வழிகெடுத்தலுக்கு இரையாகி என்னைப் பின்பற்றி நடப்பர் என்று அவன் பெரும் சவாலுடன் இந்த விஷயத்தைக் கூறியுள்ளான். எனவே ரமலானில் நாம் இந்த சவாலை எதிர் கொள்ள வேண்டும்.

---

ரமலானில் திருக்குர்ஆன் ஓதுதல், கற்பித்தல், ஓதிக் காட்டுதல் ஆகியவற்றின் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். இறைதியானத்தின் பக்கம் அதிக கவனம் இருக்க வேண்டும். இறை வணக்கங்களின் பக்கம் அதிக கவனம் இருக்க வேண்டும்

---

நோன்பின் மூலமாக இறைவனின் எதிர்பார்ப்பு என்னவென்றால், ஓர் உணவைக் குறைத்துக் கொண்டு மற்றோர் உணவை அதிகரிக்க வேண்டும். நோன்பின் நோக்கம் இதுவே ஆகும். அதாவது மனிதன் உடலை வளர்க்கும் ஒரு ரொட்டியை விட்டு விட்டு ஆன்மாவின் நிம்மதிக்கும் திருப்திக்கும் காரணமான மற்றொரு ரொட்டியை பெற வேண்டும்

---

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 15 மார்ச் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **அமான்** மாதம் **15ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ﴿۱۸۴﴾ اَيَّامًا مَّعْدُوْدٰتٍ ؕ فَمَنْ كَانَ مِنْكُمْ مَّرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ؕ وَعَلَى الَّذِيْنَ يُطِيْقُوْنَهٗ فِدْيَةٌ طَعَامُ مِسْكِيْنٍ ؕ فَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَهُوَ خَيْرٌ لَّهٗ ؕ وَاَنْ تَصُوْمُوْا خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ﴿۱۸۵﴾

நம்பிக்கை கொண்டவர்களே! உங்களுக்கு முன்னிருந்த மக்களுக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்றே உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சத்தைப் பெறலாம். கணிக்கப்பட்ட சில நாட்கள் ஆகும். எனவே உங்களுள் நோயாளியாகவோ, பயணத்திலோ இருப்பவர் அத்தனை நாட்களின் நோன்புகளை மற்ற நாட்களில் நிறைவு செய்யட்டும். மேலும், இதற்கான ஆற்றல் கொண்டிருப்போர் பரிகாரமாக ஓர் ஏழைக்கு உணவளிப்பது கடமையாகும். எவர் ஒருவர் நஃபிலான நற்செயல் செய்வாரோ அது அவருக்கு மிகவும் நன்றாகும். மேலும், நீங்கள் அறிவீர்களாயின் நீங்கள் நோன்பு நோற்பது உங்களுக்குச் சிறந்தது.(2:184-185)

அல்லாஹ்வின் அருளால் ரமலான் மாதம் துவங்கி விட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இது மிகவும் மகத்துவ மிக்க அருள்களைக் கொண்ட மாதமாகும். அல்லாஹ் இந்த மாதத்தில் தன்னுடைய அடியார்களுக்குத் தன்னுடைய அருட்களை வழங்குவதற்காக மிகவும் கருணையாளனாகி விடுகின்றான். அல்லாஹ்வோ சாதாரண நாட்களிலும் தன்னுடைய அடியார்களுக்கு எந்த அளவுக்கு அருட்களைப் பொழிகின்றான் என்றால் அதைப் பற்றி நாம் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

குறிப்பாக அவன் இந்த மாதத்தில் ஷைத்தானை விலங்கிட்டு அவனது பிடியிலிருந்து வெளியே வருவதற்கான ஏற்பாட்டைச் செய்யும்போது, அதற்கு உதாரணம் அளிப்பதற்கு நம்மிடம் வார்த்தைகளே இல்லை. நாம் எப்பொழுது அல்லாஹ்வின் பக்கம் முன்னேறிச் சென்றாலும் அவனுடைய பேரருளின் வாயில்களை முன்னரை விட அதிகம் திறந்திருக்க பெறுகிறோம். ஆக, இந்த மாதத்தைத் தன்னுடைய பேரருள்களைப் பொழிந்திடுவதற்காக அல்லாஹ் நிர்ணயித்துள்ளான்.

அல்லாஹ்வின் வணக்க வழிபாடுகளில் கடந்த நாட்களில் நாம் என்ன சோம்பேறித்தனத்தைக் காட்டி விட்டோமோ நஃபில்களை நிறைவேற்றுவதில் என்ன சோம்பேறித்தனத்தைக் காட்டி விட்டோமோ நஃபில்களை நிறைவேற்றுவதில் என்ன சோம்பேறித்தனத்தைக் காட்டி விட்டோமோ திருக்குர்ஆனை ஓதுவதில் படிப்பதில், புரிவதில் என்ன சோம்பேறித்தனத்தைக் காட்டி விட்டோமோ திருக்குர்ஆனின் போதனைப்படி அமல் செய்வதில் என்ன சோம்பேறித்தனத்தைக் காட்டி விட்டோமோ அவற்றிற்காக இந்த மாதத்தில் ஏற்பாட்டைச் செய்து விட்டான். அதாவது, இந்த மாதத்தில் ஃபர்ழ்களையும் நஃபில்களையும் குறிப்பாக நிறைவேற்றுவதற்கான சூழல் உள்ளது. எனவே பயன் பெறுங்கள்.

பள்ளிவாசல்களிலும் தர்ஸூக்கான ஏற்பாடு இருக்கின்றது. MTA விலும் ஏற்பாடு உள்ளது. இதிலிருந்து பயன் பெற வேண்டும். மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தைத் தேட வேண்டும். பிறகு, அந்த சூழலின் தாக்கத்தை நாம் நம்முடைய வாழ்வின் நிரந்தர அங்கமாக ஆக்க வேண்டும். அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் அருட்களுக்கும், கருணைக்கும் நிரந்தர வாரிசுகளாக ஆகிக் கொண்டே செல்வோம். எனவே அல்லாஹ் தஆலா கூறுகின்றான்: இந்த சூழலிருந்து மிகச் சிறந்த (முறையில்) பயன்பெறுவதற்கான முயற்சி செய்தவாறு என் பக்கம் விரைந்து வாருங்கள்.

மேலும் தன் அடியான் அல்லாஹ்வின் பக்கம் வரும்போது அல்லாஹ்வுக்கு எந்த அளவு மகிழ்ச்சி ஏற்படுகின்றது என்பதை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டலில் இருந்து அனுமானிக்க முடிகிறது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: தொலைந்து போன தன் குழந்தை கிடைக்கும்போது தாய்க்கு எந்த அளவு மகிழ்ச்சி ஏற்படுகிறதோ அதை விட அதிகமான மகிழ்ச்சி அல்லாஹ்வுக்கு தொலைந்து போன தன் அடியான் கிடைக்கும்போது ஏற்படுகிறது. அதாவது எவர்கள் அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் செலுத்தக் கூடியவர்கள் இல்லையோ அல்லது அதற்கான உரிமையை நிறைவேற்றியவாறு செலுத்தவதில்லையோ அதில் சோம்பல் காட்டக் கூடியவர்களோ அவர்கள் உண்மையான முறையில் இந்த உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாக ஆகிவிடும்போது அல்லாஹ்வின் மகிழ்ச்சிக்கு எல்லையே இருப்பதில்லை.

அல்லாஹ் தன் அடியானிடம் மகிழ்ச்சி கொள்ளும்போது அவனுக்கு எந்த அளவுக்கு அருளுகின்றான் என்றால், அதற்கு அளவே இல்லை. எனவே நாம் ரமலானில் இந்த சூழலிலிருந்து பயனடைந்தவாறு உண்மையான விதத்தில் அல்லாஹ்வின் அருட்களை ஈர்ப்பவர்களாகிவிட்டோம் எனில், நாம் நற்பேறு பெற்றவர்களாவோம்.

நான் ஓதிய இந்த வசனங்களில் அல்லாஹ், இறையச்சத்தின்படி செயல்பட்டு அவனுடைய கட்டளைகளின்படி நடப்பதன் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ள அதேவேளையில் நோன்புடன் தொடர்புடைய சில கட்டளைகள் பற்றியும் கூறியுள்ளான்.

நாம் அவனது நெருக்கத்தைப் பெறுபவர்களாக ஆகிவிடும் பொருட்டு அவனுடைய நெருக்கத்திற்கான அந்த வழிகளில் செல்பவர்களாக ஆகிவிடும் பொருட்டு, இத்தகைய நுட்பமான ஞானமிக்க மறையை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலமாக அல்லாஹ் நமக்கு அருளியுள்ளான். எனவே நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம்.

இது முதல் வசனமாகும். இதன் முதல் கட்டளையிலேயே நமக்குப் பணிவான வழிகளில் செல்வதன் பக்கம் கவனமூட்டி விட்டான். மேலும் இதைக் கூறி நமக்குப் பணிவை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியுள்ளான்: நீங்கள் நோன்பு நோற்று உங்களுடைய தனிச்சிறப்பாக இருக்கும் ஒரு செயலை ஒன்றும் செய்து விடவில்லை. மாறாக, உங்களுக்கு முன்னிருந்த மக்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டிருந்தது.

அவர்களுடைய நோன்பின் வழிமுறையில் ஏதாவது வித்தியாசம் இருக்கலாம். ஆனால், அவர்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டிருந்தது. அவர்கள் இறையச்சத்தின்படி நடப்பது (அதன்) நோக்கமாக இருந்தது. மேலும் நீங்கள் இறையச்சத்தின்படி செயல்பட வேண்டும் என்பதுவே உங்களுக்கும் நோன்பிற்கான நோக்கமாக உள்ளது. அதாவது நீங்கள் தவறான விஷயங்களில் இருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். நல்ல விஷயங்களை மேற்கொள்ளுங்கள்.

போர் வீரன் ஒருவன் கேடயத்துக்குப் பின்னால் தன்னை தான் காத்துக் கொள்வதற்கு முயற்சி செய்வது போன்று பாவங்கள் மற்றும் தவறான விஷயங்களில் இருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். கேடயத்தை முன்னால் வைக்கும் போர்வீரன் தன்னைக் காத்துக் கொள்வது மட்டுமில்லை ; அதையும் தாண்டி, அவன் எதிரி மீது தாக்குதலும் தொடுக்கின்றான். எனவே நீங்களும் இறையச்சத்தின்படி நடக்கின்றீர்கள் என்றால் உங்களை மட்டும் காத்துக் கொள்ள மாட்டீர்கள்; அதையும் தாண்டி, ஷைத்தான் மீதும் ஷைத்தானிய சிந்தனைகள் மீதும் தாக்குதல் தொடுத்து அவனையும் கொன்று விடுவீர்கள்.மேலும் இதுவே வழிமுறை ஆகும். இதன் மூலமே இறையச்சத்தின் படி நடந்தவாறு நோன்பிற்கான உரிமை நிறைவேற்றப்படுகிறது. இல்லையென்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களைப் பசியுடன் வைத்திருப்பதற்கு அல்லாஹ்வுக்கு எந்த ஆசையும் இல்லை. அசல் நோக்கமோ இறையச்சத்தை உருவாக்குவதாகும். இது இல்லையென்றால் நோன்பிற்கான நோக்கமே மரணித்து விடுகின்றது.

இன்றைய நாட்களிலோ முஸ்லிம்கள் பலரின் பெரும்பாலான மக்களிடம் பசியோடு இருக்கும் விஷயம் கூட இருப்பதில்லை. குறிப்பாக செல்வந்தர்களான மக்கள் பெரும்பாலார் ஸஹ்ர் வைப்பதிலும் மிகப் பெரும் ஏற்பாடு செய்கிறார்கள். இஃப்தாரும் மிகப் பெரும் ஏற்பாட்டில் செய்கிறார்கள். ஆனால், பாவப்பட்ட ஏழை இருக்கின்றார். அவருக்கு ஸஹ்ர் உணவும், இஃப்தாரும் கூட மிகவும் சிரமமாகவே கிடைக்கின்றது.

ஆனால், அவர்களும் நோன்பில் பசித்திருப்பதோடு சேர்த்து தண்ணீர் அருந்துவதில் இருந்தும் தவிர்ந்து இருப்பது, அவர்கள் இறையச்சத்தின் வழிகளையும் தேடும்போது தம்முடைய இறைவணக்கங்களை சீர்தூக்குவதற்கு முயற்சி செய்யும்போதும்தான், அல்லாஹ்வின் பார்வையில் ஏற்றுக் கொள்ளப்படுவர்.

இங்கு இந்த விஷயத்தையும் எடுத்துக் கூறி விடுகின்றேன். செல்வந்தர்கள் தமது பகுதியில் உள்ள ஏழைகளை ரமலானில் குறிப்பாக கவனித்துக் கொள்ளுங்கள். இஃப்தார்களில் செல்வந்தர்களை மட்டும் ஒன்று திரட்டி இஃப்தார்களிலிருந்து இன்புறக் கூடியவர்களாக இருக்கக் கூடாது; மாறாக, ஏழைகளுக்கான இஃப்தார்களுக்கும் ஏற்பாடு செய்யுங்கள்.

இந்தப் பெரும் பெரும் இஃப்தார் (நிகழ்ச்சி)கள் நடக்கின்றனவே அவற்றில் பொதுவாகவே எனக்கு உடன்பாடு இல்லை. இப்பொழுது இது வெளிக்காட்டுதல் மற்றும் பித்அத் எனும் சாயலைப் பெற்று விட்டது. ரமலானிலோ திருக்குர்ஆனை ஓதுதல், கற்றுக் கொடுத்தல் (பிறர்) ஓதக் கேட்டல் (பிறருக்கு) ஓதிக் காட்டுதல் ஆகியவற்றின் பக்கம் அதிகம் கவனம் இருக்க வேண்டும். இறைதியானத்தின் பக்கம் அதிகம் கவனம் இருக்க வேண்டும். இறைவணக்கங்களின் பக்கம் அதிகம் கவனம் இருக்க வேண்டும்.

ஆனால், என்ன நடக்கின்றது என்றால், இதற்குப் பகரமாக எந்த மக்கள் பல்வேறு வகையான வேலைகளை செய்கின்றார்களோ அவர்கள் தங்களுடைய வேலைகளை (முடித்து) விட்டு வந்து இஃப்தார் விருந்துகளை உண்பதில் மூழ்கிவிடுகின்றார்கள். இஃப்தாருக்கான அழைப்பு விடுத்திருப்பவர்களும் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸைப் படிப்பது, திக்ரே இலாஹி செய்வது மற்றும் இறை வணக்கங்கள் பக்கம் கவனம் செலுத்துவது ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்துவதற்கு பகரமாக எப்படி இஃப்தாருக்கான சிறந்ததிலும் சிறந்த ஏற்பாட்டை செய்யலாம்; எப்படி நல்லதிலும் நல்ல இஃப்தார் உணவு தயார் செய்யலாம். அதன் மூலம் அருமை ! அருமை ! ;இஃப்தாரில் அமர்க்களப்படுத்தி விட்டீர்கள் என்று மக்கள் தம்மைப் புகழ வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருப்பார்கள்.

ஆக, இந்த விஷயங்கள் ரமலானின் நோக்கங்கள் அல்ல. இவையோ இறையச்சத்தை விட்டும் தொலைவில் அழைத்துச் செல்லக் கூடிய விஷயங்கள் ஆகும்.

எனவே கேடயத்திலிருந்து பயன் பெறுவதற்காக கேடயத்தை சரியாக பயன்படுத்துவதும் அவசியமாகும். இல்லையெனில், ஷைத்தானோ வலம், இடம், முன், பின் இருந்து தாக்குதல் தொடுப்பான். எவ்வாறு காத்துக் கொள்வோம்? பிறகு, அழித்து விடக் கூடிய காயத்தைக் கொண்டு இந்த ஷைத்தானால் மனிதனைக் காயப்படுத்தவும் முடியும். எனவே நாம் ரமலானில் நோன்பிற்கான உரிமையை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். உண்மையான நோக்கமான இறையச்சத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் தஆலாவுக்காக ஆகுமான விஷயங்களில் இருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும்.

பிறகு, நிச்சயமாக அல்லாஹ்வின் கருணைப் பார்வை நம் மீது விழும். அல்லாஹ் தஆலா நம்முடைய ஷைத்தானையும் விலங்கிட்டு விடுவான். நன்மைகள் செய்வதற்கான விசாலமான மைதானத்தை எவ்வித தங்கு தடையுமின்றி நாம் கடந்து சென்று கொண்டே இருப்போம். இபாதத்கள் (இறை வணக்கங்கள்) மற்றும் திக்ரே இலாஹி (இறை தியானம்) எனும் அரண் நம்மை அல்லாஹ் தஆலாவின் அருளால் ஷைத்தானிய தாக்குதல்கள் மற்றும் தடைகளிலிருந்து காப்பாற்றிக் கொண்டே செல்லும். ஷைத்தானை ஒன்றும் சாதாரண விஷயமாக கருதி விடக் கூடாது. அவன் அல்லாஹ்வின் அடியார்களில் பெரும்பாலோர் என்னுடைய வழிகெடுத்தலுக்கு ஆளாகி எனக்குப் பின்னால் செல்வார்கள் என்று பெரும் சவால் விடுத்துக் கூறியுள்ளான்.

எனவே நாம் ரமலானில் அவனுடைய இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும். பிறகு, நாம் இபாதத்கள் (செய்தல்) மற்றும் திருக்குர்ஆனின் கட்டளைகள்படி செயல்படுதல் எனும் ஆயுதத்தால் எப்பொழுதும் ஷைத்தானை எதிர்கொண்டு கொண்டே செல்வதற்கான முயற்சியை செய்ய வேண்டும். ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் நோன்பின் உண்மைத்துவம் பற்றி எடுத்துரைத்தவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

நோன்பின் உண்மைத்துவத்தையும் மக்கள் அறியாதவர்களாக இருக்கின்றார்கள். உண்மை என்னவென்றால், மனிதன் எந்த நாட்டுக்கு செல்வதில்லையோ எந்த உலகத்தைப் பற்றி அறிந்திருப்பதில்லையோ அதன் நிலைமைகளை எப்படி எடுத்துரைப்பான்! நோன்பு என்பது அதில் மனிதன் பசியுடனும், தாகத்துடனும் இருப்பது மட்டும் அல்ல. அதையும் தாண்டி, அதற்கு ஓர் உண்மைத்துவமும் அதற்கான ஒரு தாக்கமும் உள்ளது. அது அனுபவத்தால் தெரிய வருகிறது. மனிதன் எவ்வளவு குறைவாக உண்கிறானோ அவ்வளவே அவனது ஆன்மா தூய்மை அடைவதும், அவனது கஷ்ஃபின் ஆற்றல்கள் அதிகரிப்பதும் மனிதனின் இயல்பில் உள்ளது.

ஆனால், துர்பாக்கியமான முறையில் இன்றைய நாட்களிலோ (நன்றாக) உண்ணுதல், பருகுதலை நோன்பு எனப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும் அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

இதன் மூலம், அதாவது நோன்பின் மூலம் ஓர் உணவைக் குறைத்து மற்றோர் உணவை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்றே எல்லாம் வல்ல இறைவன் விரும்புகிறான். நோன்பு நோற்பவர் எப்பொழுதும் இதைக் கருத்திற் கொள்ள வேண்டும். (அவர்) பசியுடன் இருப்பது மட்டும் இதன் பொருள் அல்ல. அதற்கும் மேற்பட்டு அவர் இறைவனை நினைவு கூர்வதில் மூழ்கியிருக்க வேண்டும். இவ்வாறு உலகைத் துண்டித்து கொண்டு முழுமையாக இறைவன் புறம் சென்று விடும் நிலை ஏற்படும்.

அதாவது அல்லாஹ் தஆலாவின் பக்கம் கவனம் பிறக்க வேண்டும். உலகத்தின் மீது நாட்டம் கொள்ளக் கூடாது. ஆகவே மனிதன் உடலை மட்டும் வளர்க்கக் கூடிய ரொட்டியை விட்டு விட்டு ஆன்மாவின் நிம்மதிக்கும் நிறைவுக்கும் காரணமாக அமையும் மற்றொரு ரொட்டியை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே நோன்பின் பொருளாகும். எவர்கள் இறைவனுக்காக மட்டுமே நோன்பு நோற்கிறார்களோ சடங்கிற்காக நோன்பு வைப்பதில்லையோ அவர்கள் அல்லாஹ் தஆலாவைப் புகழ்வதிலும் அவனது தூய்மையை எடுத்துரைப்பதிலும் அவனது ஏகத்துவத்தை எடுத்துரைப்பதிலும் ஈடுபட்டிருக்க வேண்டும். இதனால் மற்றோர் உணவு அவர்களுக்குக் கிடைத்து விடும்.

எனவே ரமலானில் திருக்குர்ஆனை ஓதுதல் மற்றும் புரிதல் ஆகியவற்றுடன் சேர்த்து, இபாதத் (இறை வணக்கம்) மற்றும் திக்ரே இலாஹி (இறைவனை நினைவு

கூர்தல்) ஆகியவையும் மிகவும் அவசியமாகும். உள்ளம் அல்லாஹ்வைப் புகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும். அவனது தூய்மையை எடுத்துரைக்க வேண்டும். அதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ள துஆ இருக்கின்றது. அது இல்ஹாமிய துஆவும் ஆகும்.

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللهِ الْعَظِيْمِ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ

இது ஒரு மிக முக்கியமான துஆ ஆகும். துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவது அவசியமாகும். இது அல்லாஹ் தஆலாவின் கட்டளையாகும். இவ்வாறே, ஓரிறைமையை எடுத்துரைப்பது உள்ளது. அதாவது, அல்லாஹ்வின் ஏகத்துவத்தை பறைசாற்றுவது இதுவும் மிகவும் அவசியமானது. எனவே இவை வழிவகைகளாகும். இவை இறையச்சத்தில் முன்னேற்றமடைவதற்குக் காரணமாகத் திகழ்கின்றன. துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் முக்கியமானவையாகும். எனவே இதன் பக்கம் நாம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும்.

அல்லாஹ் தஆலா திருக்குர்ஆனில் இறையச்சத்தின்படி நடப்பதற்கு எண்ணற்ற இடங்களில் வலியுறுத்துகின்றான். ஒவ்வொரு நன்மையைப் பெறுவதற்காகவும் இறையச்சத்தை நிபந்தனையாக வைத்துள்ளான். எனவே இதன் பக்கம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இதன் பக்கம் எண்ணற்ற இடங்களில் இன்னும் சொல்வதாயின் ஏறத்தாழ எல்லா சபைகளிலுமே கவனமூட்டியுள்ளார்கள். அன்னாரின்(அலை) ஒரு கவிதை வரி இவ்வாறு உள்ளது:

அதாவது ஒவ்வொரு நன்மையின் ஆணி வேர் இந்த இறையச்சம் ஆகும். அப்பொழுது அல்லாஹ் அன்னாருக்கு இல்ஹாம் மூலமாக கவிதையின் அடுத்த வரியை இவ்வாறு கூறினான்:

அதாவது இந்த ஆணிவேர் நிலைத்திருந்தால் அனைத்தும் இருக்கின்றது.

ஆக, அல்லாஹ் தஆலாவுக்குப் பிடித்தது இறையச்சம் தான். இறையச்சமே ஒவ்வொரு நன்மையின் பக்கமும் அழைத்துச் செல்கின்றது. இறையச்சமே உலக ஆடம்பரங்களை விட்டும் தூய்மையாக்குகின்றது. இறையச்சத்தின் மூலமாகவே மனிதனின் பௌதீகம் மற்றும் ஆன்மிகம் என அனைத்து விதமான தேவைகளும் நிறைவேறுகின்றன. எனவே இறையச்சத்தைப் பெறுவது ஒரு நம்பிக்கை கொண்டவரின் தலையாய கடமையாக இருக்க வேண்டும்.

நான் கூறியது போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இறையச்சம் எனும் கருத்தை பல்வேறு கோணங்களில் பல இடங்களில் எடுத்துக் கூறியுள்ளார்கள். இது தொடர்பாக ஹுஸூர் (அலை) அவர்களுடைய சில வழிகாட்டல்களையும் முன் வைக்கின்றேன். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

هُدًى لِّلْمُتَّقِيْنَ

என்று திருக்குர்ஆன் துவக்கத்திலேயே கூறுகின்றது. அதாவது, இறையச்சம் உடையவர்களுக்கு நேர்வழி காட்டக் கூடியது. எனவே திருக்குர்ஆனைப் புரிவதற்கும், அதன்படி நேர்வழி பெறுவதற்கும் இறையச்சம் அவசியமான அசல் விஷயம் ஆகும். இவ்வாறே பிறிதோரிடத்தில்

لَا يَمَسُّهٗۤ اِلَّا الْمُطَهَّرُوْنَ

என்று கூறியுள்ளான். அதாவது தூய்மையானவர்களைத் தவிர வேறு யாராலும் அதனைத் தொட முடியாது. மற்ற கல்விகளில் இந்த நிபந்தனை இல்லை.

கணிதம் உள்ளது; வடிவவியல் உள்ளது; மற்ற கல்வித் துறைகள் இருக்கின்றன. கற்றுக் கொள்பவர் நிச்சயம் இறையச்சம் உடையவராகவும், தீமைகளில் இருந்து தவிர்ந்திருப்பவராகவும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை அவற்றில் இல்லை. மாறாக, ஒருவன் எவ்வளவு தீயவனாகவும், பொல்லாதவனாகவும் இருந்தாலும் அவனும் கற்றுக் கொள்ளலாம். இன்னும் சொல்லப்போனால் இன்றைய நாட்களில் இந்த மக்கள் இந்தக் கல்வித்துறையில் மிக அதிகமாக முன்னேறியுள்ளார்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: ஆனால், மார்க்கத்தின் ஞானத்தில் வெற்று வாய்வாதம் செய்பவரும் தத்துவஞானியும் முன்னேற முடியாது. மேலும் எவருடைய உள்ளம் சீர்கெட்டுள்ளதோ, இறையச்சத்திலிருந்து பங்கு பெற்றிருக்கவில்லையோ அவருக்கு அந்த உண்மைகளும், இறைஞானங்களும் திறக்க முடியாது. பிறகு, மார்க்கத்தின் ஞானங்களும் உண்மைகளும் அவருடைய நாவில் ஓடுகின்றன என்று அவர் கூறுகிறார். அவர் பொய்யுரைக்கிறார். அவருக்கு மார்க்கத்தின் உண்மைகள் மற்றும் இறைஞானங்கள் ஆகியவற்றிலிருந்து ஒருபோதும், ஒருபோதும் பங்கு கிடைப்பதில்லை. மாறாக, மார்க்கத்தின் உன்னதமான விஷயங்கள் மற்றும் நுண்ணிய கருத்துகளை அறிவதற்கு இறையச்சமுடையவராக இருப்பது நிபந்தனையாகும்.

உதாரணமாக, பாரசீக கவிதை வரி உள்ளது:

அதன் பொருள்: உள்ளம் எனும் ஊரிலிருந்து எல்லா விதமான கூச்சல் மற்றும் சலசலப்புகளை காலியாக்கி விடும்போதுதான் திருக்குர்ஆன் எனும் மணமகள் முகத்திரையை அகற்றுகிறாள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இந்த விஷயம் உருவாகிவிடாத வரை உள்ளம் எனும் ஊர் காலியாகி விடாத வரை. அதாவது உள்ளம் எனும் ஊரை உலக அசுத்தங்களை விட்டும் தூய்மையாக்குவது அவசியமாகும். அது அவற்றை விட்டும் காலியாகவில்லை என்றால், பிறகு எந்தப் பலனும் இல்லை. அன்னார் (அலை) கூறினார்கள்: அந்த சலசலப்பு என்ன? இந்தக் கூச்சலிடுதல் என்ன? தீமைகள் அசுத்தங்கள் தான். சலசலப்பு எனப்படும் அசுத்தங்கள் என்ன? தீமைகள் அசுத்தங்கள் ஆகிய இவைதான்: உலகை விரும்புதல்தான்.

எனினும் திருடனைப் போன்று ஏதாவது கூறினால் வேண்டுமானால் கூறலாம் என்பது வேறு விஷயம். அதாவது யாராவது ஒருவர் நன்மை பற்றிய விஷயங்களை எப்பொழுதாவது கூறிவிட்டார் என்றாலும் அவை மற்றவர்களிடமிருந்து திருடப்பட்ட விஷயங்களாக இருக்கும். தம்முடைய விஷயங்களாக இருக்காது. ஆனால் எவர்கள் பரிசுத்த ஆன்மாவால் உரையாடுகின்றார்களோ அவர்கள் இறையச்சமின்றி உரையாடுவதில்லை. இதை நன்றாக நினைவிற் கொள்ளுங்கள்! இறையச்சம் எல்லா மார்க்க ஞானங்களின் திறவுகோலாகும். மனிதன் இறையச்சம் இல்லாமல் அவற்றை கற்க முடியாது. உதாரணமாக, அல்லாஹ் தஆலா .

الٓمّٓ ۚ﴿۲﴾ ذٰلِكَ الْكِتٰبُ لَا رَيْبَ ۛۚ فِيْهِ ۛۚ

هُدًى لِّلْمُتَّقِيْنَ ﴿۳﴾

الَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ

என்று கூறியிருக்கின்றான். இந்த மறை இறையச்சம் கொள்ளக் கூடியவர்களுக்கு நேர்வழி வழங்குகின்றது. அவர்கள் யார்?

يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ

மறைவானவற்றின் மீது ஈமான் கொள்பவர்கள் ஆவர். அதாவது இப்பொழுது அந்த இறைவன் கண்ணுக்குத் தென்படுவதில்லை : ஆனால், இறைவன் இருக்கின்றான் என்று அவர்களுக்கு அல்லாஹ் தஆலாவின் மீது ஈமான் இருக்கின்றது. மேலும் அனுபவம் இல்லை. ஆனால், பிறகும் கூட இறைவன் இருக்கின்றான் என்று ஈமான் கொள்கின்றார்கள்.

பிறகு தொழுகையை நிலைநிறுத்துகிறார்கள். அதாவது தொழுகையில் தற்பொழுது முழுமையான இன்பமும், ஆர்வமும் உருவாகுவதில்லை. நிலைநிறுத்துதல் என்பதன் பொருள் இப்பொழுது முழுமையான இன்பமும், ஆர்வமும் உருவாகவில்லை என்பதாகும். எனினும் இன்பமின்மை, ஆர்வம் இன்மை மற்றும் சஞ்சலங்களிலும் அவர்கள் தொழுகையை நிலைநாட்டுகின்றார்கள். மேலும் நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து அவர்கள் சிலவற்றை செலவு செய்கின்றார்கள். மேலும் உம் மீதும் உமக்கு முன்னர் இறக்கப்பட்டதன் மீதும் அவர்கள் நம்பிக்கை கொள்கிறார்கள். இவை இறையச்சம் உடையவர்களின் ஆரம்ப படித்தரங்களும், பண்புகளும் ஆகும் என்று அல்லாஹ் கூறுகிறான். இந்த விஷயங்கள் இருக்கின்றனவே இவையோ ஓர் இறையச்சம் உடையவரின் ஆரம்பப் படித்தரங்கள் ஆகும்; அந்தஸ்துகள் ஆகும்; பண்புகளாகும். இந்த ஈமானிய விஷயங்கள் இருக்க வேண்டும். மறைவானவற்றின் மீது ஈமான் கொள்வது மற்றும் தொழுகையை நிலைநாட்டுவது ஆகிய இவை அனைத்தும் ஆரம்ப விஷயங்கள் ஆகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அவர்கள் இறைவன் மீது ஈமான் கொள்கின்றார்கள்; தொழுகின்றார்கள்; செலவு செய்கின்றார்கள்; அவ்வாறே இறைவனின் வேதங்களின் மீது ஈமான் கொள்கின்றார்கள்; பிறகு இதைத் தவிர்த்து புதிய நேர்வழி என்ன கிடைத்தது? என்ற ஆட்சேபனை இங்கு எழுகின்றது. அவற்றையோ முன்பிருந்தே செய்து கொண்டிருக்கின்றார்கள். பிறகு இதை விட முன்னோக்கி செல்வது என்ன இருக்கின்றது? இதுவோ ஒருவகையில் உள்ளதைப் பெறுவதாக இருக்கின்றது. அதாவது ஏற்கனவே இருப்பதையே மீண்டும் பெறுவதாக இருக்கின்றது.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இந்த கேள்விக்கான பதிலாவது; இந்த வாக்கியங்களும் இந்த சொற்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ள அளவிலேயே இருக்கின்றன. இவை மனிதனின் உயர்வான நடத்தை மற்றும் முழுமையான இறைஞானத்தைக் குறிப்பதில்லை. இந்த இறைவணக்கங்கள் எல்லாம் சரிதான். இவற்றை செய்யுங்கள்; ஆனால் இது அவனுடைய உச்சக்கட்ட பணியல்ல. அவனுடைய இறுதியான நோக்கம் அல்ல என்று என்று அல்லாஹ் கூறுகின்றான்.

இவையோ ஆரம்ப விஷயங்கள் ஆகும். அதாவது அல்லாஹ்வின் மீதும் மறைவானவற்றின் மீதும் ஈமான் கொள்வது, தொழுகைகளைத் தொழுவது, தொழுகைகள் விழுந்து விட்டால் பிறகு கவனம் செலுத்துவது, ஓரளவு செலவு செய்து விடுவது ஆகிய இவையோ நன்மைகளின் பக்கம் அழைத்துச் செல்வதற்கான ஆரம்ப விஷயங்கள் ஆகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒருவேளை நேர்வழிக்கான இறுதி கட்டம் என்பது يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ (மறைவானவற்றின் மீது ஈமான் கொள்ளுதல்) என்பது வரையே என்றால், பிறகு இறைஞானம் என்பது என்ன ஆனது? மறைவானவற்றின் மீது ஈமான் கொள்ளுங்கள் என்பதே நேர்வழி என்றால், பிறகு இறைஞானம் என்ன ஆனது? அல்லாஹ்வை எப்படி அடையாளம் கண்டு கொள்ள முடியும்? எனவே எவர் திருக்குர்ஆனின் நேர்வழிக்குக் கட்டுப்பட்டு நடப்பாரோ அவர் இறைஞானத்தின் உயர்தரத்தை எட்டி விடுவார்.

இறைஞானத்தைப் பெற வேண்டும் என்றால் திருக்குர்ஆனின் போதனையைப் படியுங்கள்; அவற்றின்படி செயல்படுங்கள். பிறகு இறைஞானத்தின் அந்தஸ்து கிடைக்கப் பெறும்.மனிதன் மறைவான ஞானத்தைக் கடந்து செல்வான். மேலும் அவன் يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ அதாவது மறைவானவற்றின் மீதான நம்பிக்கை என்பதை தாண்டி நேரில் பார்க்கக் கூடிய நிலை வரை முன்னேற்றம் அடைவான்.

ஒருவகையில் இறைவனின் இருப்பை உறுதியான கண்ணால் காணுதல் என்ற அந்தஸ்து கிடைக்கும். அமல் இருந்தால் தான் அய்னுல் யகீன் - .உறுதியான கண்ணால் காணல் என்ற அந்தஸ்து கிடைக்கும்.

எனவே மறைவானவற்றின் மீது ஈமான் கொள்ளுதல் என்ற நிலையை கடந்து செல்வதற்குத் திருக்குர்ஆனுடைய கட்டளைகளின் படி செயல்படுவது அவசியமாகும். மறைவானவற்றின் மீது ஏன் நம்பிக்கை கொள்ள வேண்டும்? என்று மக்கள் கேள்வி கேட்கிறார்கள். இன்றைய காலத்தில் ஏன்? என்ற கேள்வி இளைஞர்களிடமும், பிள்ளைகளிடமும் அதிகம் எழுகிறது. எந்த விஷயத்தைப் பற்றி எங்களுக்குத் தெரியவே இல்லையோ அதன் மீது நாங்கள் ஏன் நம்பிக்கை கொள்ள வேண்டும்? என்று கேட்கிறார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்: மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வதோ ஆரம்ப கட்டமாகும். வழங்கப்பட்டிருக்கின்ற இந்த மறையின்படி செயல்படுங்கள். ஈமான் கொண்ட பிறகு அதன்படி அமல் செய்வதும் அவசியமாகும். அது உங்களுக்கு அல்லாஹ் தஆலாவை சரியான முறையில் அடையாளம் காட்டும். அப்பொழுது மறைவானவற்றிலிருந்து வெளியே வந்து கண்ணால் பார்க்கக் கூடிய நிலை உருவாகும். மறைவானவற்றின் மூலமாக மட்டும் அன்றி, அதையும் தாண்டி சுயமாக இறைவன் யார்? என்பதை மனிதன் பார்த்து விடுவான்.

இதுவோ உலகத்தின் விதியாகவும் இருக்கிறது. அனுபவங்களிலும் முதலில் ஓர் உத்தேசம் உருவாகிறது என்பதை எவர்கள் விஞ்ஞானிகளோ, ஆராய்ச்சியாளர்களோ அவர்கள் அறிவார்கள். அதை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சி நடைபெறுகிறது. அது உண்மையானதாக நிரூபணம் ஆகுமோ ஆகாதோ தெரியாது. ஆனால், அதில் ஒரு கற்பனையில் ஓர் அடிப்படை அமைக்கப்படுகிறது. அதன் மீது ஆராய்ச்சி செய்யப்படுகிறது.

ஆனால் அல்லாஹ் தஆலா கூறுகின்றான்: நீங்கள் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வதை அடிப்படையாகக் ஆக்கிக் கொண்டு பிறகு திருக்குர்ஆனின் கட்டளைகளின்படி அமல் செய்யுங்கள்.கடினமாக உழையுங்கள். ஆழ்ந்த கவனம் செலுத்துங்கள். பிறகு பாருங்கள்! நீங்கள் கண்ணாலும் பார்த்து விடுவீர்கள். விஞ்ஞானிகளோ வெறும் தங்களுடைய ஆராய்ச்சிக்காக, திருப்திக்காக அந்த ஆராய்ச்சியை செய்கிறார்கள். மேலும் அவர்களுக்குத் திருப்தி ஏற்படுகிறது. பிறகு மக்களுக்குக் கூறுகிறார்கள். ஆனால் இங்கு வகுக்கப்பட்டுள்ள வடிவம் மற்றும் அதற்குப் பிறகு ஆய்வின் மூலம் ஒவ்வொரு மனிதனும் பலனடைய முடியும். இதுதான் இஸ்லாத்தின் சிறப்பாகும். இதுதான் மறைவானவற்றின் மீது ஈமான் கொள்வதன் அசல் உண்மைத்துவமாகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இவ்வாறே தொழுகையைக் குறித்து ஆரம்ப நிலையோ இதுவாக இருக்கின்றது. அது எடுத்துரைக்கப்பட்டது. அதாவது தொழுகையை நிலை நிறுத்துகிறார்கள். கியாம் என்பதன் பொருள் நிற்க வைத்தல் என்பதாகும். அதாவது தொழுகை ஒருவகையில் விழுந்து கொண்டே இருக்கிறது. விழுவது என்பதன் பொருள், அதில் ஆர்வமும், இன்பமும் இருப்பதில்லை. ஆர்வமின்மை மற்றும் சஞ்சலங்களின் தொடராக இருக்கிறது. எனவே அதில் அந்த ஓர் ஈர்ப்பும், தன்பக்கம் இழுத்தலும் இல்லை.

மனிதன் எவ்வாறு பசியாலும், தாகத்தாலும் மன உளைச்சலுக்கு ஆளாகி, உணவுக்காகவும், தண்ணீருக்காகவும் ஓடுகின்றானோ அதேபோன்று தொழுகைக்காக பித்து பிடித்தவனாக ஓட வேண்டும். ஆனால், அவன் நேர்வழி பெறும் பொழுது பிறகு இந்த சூழ்நிலை இருக்காது. அவனிடம் ஓர் ஆர்வம் உருவாகி விடும். தொழுகையிலும் ஓர் இன்பம் ஏற்படும். சஞ்சலங்களுக்கான தொடர் முடிவுக்கு வந்து, மனநிறைவு மற்றும் நிம்மதிக்கான வடிவம் துவங்கி விடும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒருவருடைய ஒரு பொருள் தொலைந்து விட்டது. அப்பொழுது சற்று பொறுத்திருங்கள்; தொழுகையில் ஞாபகம் வந்து விடும் என்று அவர் கூறியதாக மக்கள் கூறுகின்றனர். இதுவோ முழுமையானவர்களுடைய தொழுகையாக இருப்பதில்லை. ஏனெனில், அதிலோ ஷைத்தான் அவர்களிடம் சஞ்சலத்தை ஏற்படுத்துகின்றான்.

அதாவது பொருள் தொலைந்து விட்டது.அதற்கு அவன் கூறுகின்றான்: சரி, வெறுமனே அது நினைவுக்கு வரவில்லை. சரி தொழலாம். தொழுகையில் என்னுடைய சிந்தனைகள் இங்கும் அங்கும் சென்று கொண்டே இருக்கும். கடைசியில், ஒருவேளை நான் அந்தப் பொருளை எங்கே வைத்தேன் என்ற விஷயம் நினைவுக்கு வந்து விடலாம்.ஆக, இந்தத் தொழுகை முழுமையானவர்களின் தொழுகை அல்ல. இவை ஷைத்தானிய சஞ்சலங்கள் ஆகும். ஆனால் முழுமையானவர் என்ற தரம் கிடைத்திருக்கும்பொழுது எல்லா நேரமும் அவர் தொழுகையிலே இருப்பார். அதாவது எல்லாநேரமும் அல்லாஹ் நினைவில் இருப்பான். மேலும் ஆயிரக்கணக்கான வியாபாரங்களும், இலாபங்களும் கூட அவரிடம் எந்த ஓர் இடையூறையும் தடையையும் ஏற்படுத்த முடியாது. உலகத்தின் பணிகளும் நடக்கும்; இறைவன் மீதான அச்சமும் இருக்கும். இறைவனின் நினைவும் இருக்கும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இவ்வாறே மற்ற நன்மைகளும் வெறுமனே கூற்றின் வடிவத்தில் மட்டுமே இருக்காது. அவற்றில் நிகழ்வு என்ற தன்மை உருவாகி விடும். மறைவானவற்றிலிருந்து பார்த்தல் என்பதை அடைந்து விடும். இந்தப் படித்தரங்கள் வெறும் எடுத்துச் சொல்லுவதற்காக இல்லை.

நான் எடுத்துக் கூறியுள்ள இந்தப் படித்தரங்கள் சொல்வதற்காக மட்டும் அல்ல. அதாவது கதையாக உங்களுக்குக் கூறிவிட்டேன். நீங்களும் சிறிது நேரம் அதைக் கேட்டுவிட்டு இன்பம் அடைந்து விட்டீர்கள் என்று அல்ல. இது ஒரு கருவூலமாகும். இதை விட்டு விடாதீர்கள். இதை எடுத்துக் கொள்ளுங்கள். இது உங்களுடைய வீட்டிலேயே இருக்கிறது. சிறிதளவு கடினமாக உழைத்தும், முயற்சி செய்தும் இதை உங்களால் பெற முடியும்.

எனவே இன்று நம்முடைய பணியாவது, இந்த சூழலில் இருந்து பயனடைந்தவாறு அந்தக் கருவூலத்தை வெளியே எடுப்பதற்காக கடினமாக உழைக்க வேண்டும். மேலும் நாமும் அல்லாஹ் தஆலாவின் நெருக்கத்தைப் பெறக் கூடியவர்களாக ஆகிவிடும் பொருட்டு முயற்சி செய்யுங்கள் .

பிறகு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நினைவிற் கொள்ளுங்கள்! நீங்கள் இறையச்சமுடையவராக ஆகாத வரை இறையச்சத்தை மேற்கொள்ளாத வரை துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இறையச்சத்திற்கு இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று அறிவு சம்பந்தப்பட்டது; இன்னொன்று அமல் சம்பந்தப்பட்டது. அறிவு தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டு விட்டது. அதைப் பற்றி கூறிவிட்டேன். ஒருவர் இறையச்சமுடையவராக ஆகாத வரை மார்க்கத்தின் ஞானங்கள் கிடைப்பதில்லை ; உண்மைகள் மற்றும் இறைஞானங்கள் திறப்பதில்லை. அமல் தொடர்பாக இதுவாகும்; இறையச்சமுடையவராக ஆகாத வரை தொழுகை நோன்பு மற்றும் மற்ற இறைவணக்கங்கள் குறை உடையவையாக இருக்கின்றன.

இந்த விஷயத்தையும் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! இறைவனின் இரண்டு கட்டளைகள் இருக்கின்றன. ஒன்று அவனுடன் யாரையும் இணையாக்காதீர்கள். அவனுக்கு யாரையும் இணையாக்காதீர்கள். அவனுடைய பண்புகளுக்கும் யாரையும் இணையாக்காதீர்கள். அவனுடைய வணக்க வழிபாடுகளிலும் யாரையும் இணையாக்காதீர்கள். இரண்டாவது

விஷயம், மனித குலத்துடன் அனுதாபத்தோடு நடந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்கான உரிமையை செலுத்துங்கள். அடியார்களுக்கான உரிமையை செலுத்துங்கள்.

பிறகு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَنْ يَّتَّقِ اللّٰهَ يَجْعَلْ لَّهٗ مَخْرَجًا ۙ

وَّيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ

எனவே இறையச்சம் எப்படிப்பட்ட ஒன்று என்றால், அது யாருக்குக் கிடைக்கிறதோ அவருக்கு ஒருவகையில் உலகம் முழுவதிலும் உள்ள அருட்கள் கிடைத்து விடுகின்றன. இறையச்சத்தை மேற்கொள்வீர்களாயின் எத்தகைய ஏற்பாடுகளை அல்லாஹ் ஏற்படுத்தி விடுவான் என்றால், எத்தகைய இடங்களில் இருந்தெல்லாம் வாழ்வுக்குத் தேவையானவற்றை வழங்குவான் என்றால், அங்கிருந்து கிடைக்கும் என்று நீங்கள் கற்பனை கூட செய்து பார்த்திருக்க மாட்டீர்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நினைவிற் கொள்ளுங்கள்! இறையச்சம் உடையவர் ஒருபோதும் யாருடைய தேவையுடையவராகவும் இருப்பதில்லை. மாறாக, அவர் எப்படிப்பட்ட தரத்தில் இருப்பார் என்றால் அவர் எதை விரும்புகின்றாரோ அதை அவர் கேட்பதற்கு முன்னால் இறைவன் அவருக்கு வழங்கி விடுகின்றான்.

எனவே இறையச்சம் உடையவருக்கு உலகத்தின் ரிஸ்கையும் வழங்குகின்றான். இது அல்லாஹ்வுடைய வாக்குறுதியாகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நான் ஒருமுறை ஆன்மிக் காட்சியில் அல்லாஹ்வை உருவக வடிவில் கண்டேன். அவன் என் கழுத்தில் கையை வைத்து கூறினான்:

பொருள்: நீ என்னுடையவன் ஆகிவிட்டால், முழு உலகமும் உன்னுடையதாக ஆகிவிடும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இது எப்படிப்பட்ட குறிப்பு என்றால், இது எல்லா நபிமார்கள், இறைநேசர்கள் மற்றும் நல்லடியார்களால் சோதித்துப் பார்க்கப்பட்டதாகும். நீங்களும் சோதித்துப் பாருங்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நமது ஜமாஅத் இறையச்சத்தின் வழிகளில் அடி எடுத்து வைக்க வேண்டும். மேலும் தம்முடைய எதிரியின் அழிவால் தேவையில்லாமல் மகிழ்ச்சி அடையக் கூடாது. இஸ்ரவேலர்களின் எதிரிகள் தொடர்பாக தவ்ராத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: நான் அவர்களை ஏன் அழித்தேன் என்றால் அல்லாஹ் கூறுகின்றான். அவர்கள் தீயவர்கள் என்பதனால்தான் அவர்களை அழித்தேன். நீங்கள் நல்லவர்கள் என்பதனால் அல்ல. உங்களுடைய நன்மையின் காரணமாக எதிரிகள் அழியவில்லை. மாறாக, அவர்கள் தங்களுடைய தீமையின் காரணமாக அழிந்து விட்டார்கள். எனவே நல்லவர்களாக ஆகுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எனது கவிதை வரி ஒன்று இருக்கின்றது. ஹர் ஏக் நேக்கீ கி ஜட் யே இத்திகா ஹே. அகர் யே ஜட் ரஹீ சப் குச் ரஹா ஹே. அதாவது ஒவ்வொரு நன்மையின் ஆணிவேர் இந்த இறையச்சம் ஆகும். இந்த ஆணி வேர் நிலைத்திருந்தால் அனைத்தும் இருக்கிறது.

பிறகு அன்னார் (அலை) கூறுகிறார்கள்: இறையச்சம் ஒரு விஷ முறிவாகும். அதை பயன்படுத்துவோர் எல்லா நஞ்சுகளிலிருந்தும் தப்பித்து விடுகின்றார். ஆனால் இறையச்சம் முழுமையானதாக இருக்க வேண்டும். இறையச்சத்தின் ஏதாவது ஒரு அம்சத்தின்படி அமல் செய்வது எப்படி என்றால், உதாரணமாக ஒருவருக்கு பசி எடுத்திருக்கிறது. அவர் ஒரு தானியத்தை சாப்பிடுவதும் சாப்பிடாமல் இருப்பதும் ஒன்றுதான் என்பது வெளிப்படையான விஷயம்.

அவ்வாறே தண்ணீருக்கான தாகம் ஒரு துளியால் தணிய முடியாது. இந்த நிலைதான் இறையச்சத்தின் நிலையாகும். ஏதாவது ஒரு அம்சத்தின் படி அமல் செய்வது (அருள்) இறங்குவதற்குக் காரணமாக அமைய முடியாது. ஆக, எதைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகிறானோ அதுவே இறையச்சம் ஆகும்.

اِنَّ اللّٰهَ مَعَ الَّذِيْنَ اتَّقَوْا

பொருள்: நிச்சயமாக அல்லாஹ் இறையச்சம் கொண்டவருடன் இருக்கின்றான். இறைவன் உடன் இருப்பது இவர் இறையச்சமுடையவர் என்பதைக் கூறிவிடுகின்றது. அதாவது உண்மையான இறையச்சம் இருக்கிறது என்றால், இறைவன் தானே தன்னுடைய அருளால் வெளிப்படுவதைக் காட்டி விடுகின்றான். மேலும் , அவனுடைய அருளும் வெளிப்படுகின்றது. எனவே இது இறையச்சம் ஆகும். இதை நாம் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: கூற்று மீண்டும் கூறுவதாக அமைகின்றது. மீண்டும், மீண்டும் அதே விஷயங்கள் வருகின்றன. எனினும், கவனக் குறைவு இருக்கின்றது. ஒருபுறம் அறிவுரைகள் கேட்கப்படுகின்றன. உள்ளத்தில் இறையச்சத்தைப் பெறுவதற்காக உத்வேகம் உருவாகிறது. ஆனால், மீண்டும் கவனக் குறைவு ஏற்பட்டு விடுகிறது. எனவே நமது ஜமாஅத் இந்த விஷயத்தை மிகவும் அதிகமாக நினைவிற் கொள்ள வேண்டும்.

எந்நிலையிலும் அல்லாஹ்வை மறந்து விடக் கூடாது. எல்லா நேரமும் அவனிடமிருந்தே உதவி கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அவன் இன்றி மனிதன் ஒன்றுமே இல்லை. நன்றாக நினைவிற் கொள்ளுங்கள்! அவனால் ஒரு நொடிப் பொழுதில் (உங்களை) அழித்து விட முடியும். பல்வேறு வகையான துன்பங்களும், இன்னல்களும் இருக்கின்றன. அச்சமற்று தைரியத்துடன் இருப்பதற்கான இடம் அல்ல. இந்த உலகத்திலும் நரகம் இருக்கலாம். பெரும், பெரும் இன்னல்கள் வரலாம். நன்றாக நினைவிற் கொள்ள வேண்டும்.

இப்பொழுது இன்றைய நாட்களிலோ அணு ஆயுதப் போர்களைப் பற்றிய பேச்சுகள் பேசப்படுகின்றன. ஆக, அதுவும் ஒரு நரகம் தானே. அது அல்லாமல் வீசப்படக் கூடிய குண்டுகளும் நெருப்பின் உருண்டைகள் தானே.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நன்றாக நினைவிற் கொள்ள வேண்டும்! இறைவன் தானாக உதவிக் கரத்தை நீட்டாத வரை, தனது அருளால் தானே அந்த இன்னலை அகற்றி விடாத வரை எவரும் யாருடைய இன்னலிலும் உதவ முடியாது; எவரும் அனுதாபத்தில் பங்கு கொள்ள முடியாது. எனவே தான் ஒவ்வொருவரும் இறைவனுடன் மறைவான தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அதாவது மறைவான தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும். எவர் ஒருவர் துணிச்சலுடன் பாவம், தீமை, அசுத்தம் மற்றும் குற்றத்தில் மூழ்கி இருக்கின்றாரோ அவர் பயங்கரமான நிலைமையில் இருக்கின்றார். அல்லாஹ்வின் தண்டனை அவருக்காக காத்துக் கொண்டிருக்கின்றது. கருணையாளனான அல்லாஹ்வின் கருணையை மீண்டும், மீண்டும் வேண்டுகின்றீர்கள் என்றால் இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். இறைவனைக் கோபப்படுத்தக் கூடிய விஷயங்கள் அனைத்தையும் விட்டு விடுங்கள்.

எப்பொழுது வரை இறைவனுக்கு அஞ்சக் கூடிய நிலை இருக்காதோ; இது மிகவும் முக்கியமான விஷயமாகும். அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

எப்பொழுது வரை இறைவனுக்கு அஞ்சக் கூடிய நிலை இருக்காதோ அப்பொழுது வரை உண்மையான தக்வா கிடைக்க முடியாது. இறையச்சம் உடையவராக ஆகுவதற்கு முயற்சி செய்யுங்கள். இறையச்சத்தை மேற்கொள்ளாத மக்கள் அழிய ஆரம்பிக்கும் பொழுது இறையச்சம் உடைய மக்கள் காப்பாற்றப்பட்டு விடுகிறார்கள். இப்படிப்பட்ட தருணத்தில் அவர்களுடைய கட்டுப்படாமை அவர்களை அழித்து விடுகின்றது. மேலும் இவர்களின் இறையச்சம் இவர்களைக் காப்பாற்றி விடுகின்றது.

மனிதன் தன்னுடைய சாதுரியங்கள், தீய செயல்கள் மற்றும் நம்பிக்கை துரோகங்களைக் கொண்டு தப்பிக்க விரும்பினால் அவனால் ஒருபோதும் தப்பிக்க முடியாது. அல்லாஹ்வின் அருள் இல்லாத வரை எந்த ஒரு மனிதனாலும் தன் உயிரையும் பாதுகாத்துக் கொள்ள முடியாது: தன்னுடைய சந்ததிகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியாது. மேலும் எந்த ஒரு வெற்றியையும் பெற முடியாது. இறைவனுடன் மறைவான முறையில் கண்டிப்பாக தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

இபாதத்துகள், இறை தியானம் மற்றும் அல்லாஹ்வின் கட்டளைகள்படி அமல் செய்து இந்த மறைவான தொடர்பு உருவாகின்றது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவனுடன் மறைவான முறையில் கண்டிப்பாக தொடர்பு கொண்டிருக்க வேண்டும். பிறகு அந்தத் தொடர்பை பாதுகாத்து வைக்க வேண்டும். அதாவது இது நிரந்தரமாக இருக்க வேண்டும். இந்தத் தொடர்பை பாதுகாத்து வைப்பவரே அறிவுள்ள மனிதர் ஆவார். எவர் இந்தத் தொடர்பை பாதுகாத்து வைப்பதில்லையோ அவர் முட்டாள் ஆவார். அவர் தனது சாமர்த்தியத்தின் மீது கர்வம் கொள்கிறார். அவர் அழிக்கப்படுவார்.

மேலும், ஒருபோதும் அவர் நோக்கத்தை அடைய மாட்டார்; வெற்றி பெறமாட்டார். பாருங்கள்! இந்த வானம், பூமி மற்றும் இவற்றில் தென்படக் கூடிய அனைத்தும் ஆகிய இவ்வளவு பெரிய

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

தொழிற்சாலை இறைவனுடைய மறைவான கரமின்றி இயங்க முடியுமா? ஒருபோதும் முடியாது. நினைவில் கொள்ளுங்கள்! அமைதியின் நிலையில் அஞ்சுபவர் அச்சத்தின் நிலையில் காப்பாற்றப்படுகின்றார். எவர் அச்சத்தின் நிலையில் அஞ்சுகிறாரோ அது ஒன்றும் சிறப்பிற்குரிய விஷயமே அல்ல. இப்படிப்பட்ட தருணத்திலோ நிராகரிப்பாளர்கள், இணை வைப்பாளர்கள் மற்றும் மார்க்கமற்றவர்களும் கூட அஞ்சுகிறார்கள். ஃபிர்அவ்னும் கூட இப்படிப்பட்ட தருணத்தில் அஞ்சி இவ்வாறு கூறினான்:

آمَنتُ أَنَّهُ لَا إِلَٰهَ إِلَّا الَّذِي آمَنَتْ بِهِ بَنُو إِسْرَائِيلَ وَأَنَا مِنَ الْمُسْلِمِينَ

பொருள்: இஸ்ரவேலர்கள் நம்பிக்கை கொண்ட அ(ந்த இறை) வன் மீது நான் நம்பிக்கை கொள்கிறேன். அவனைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு யாருமில்லை. மேலும், நான் கட்டுப்பட்டு நடக்கக் கூடியவர்களில் ஒருவன் ஆவேன்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அதனால் அவனுக்கு இந்த அளவு மட்டுமே பயன் ஏற்பட்டது. அதாவது, அல்லாஹ் கூறினான்: உன் உடலையோ நாம் பாதுகாத்து விடுவோம். ஆனால் உன் உயிரை இப்பொழுது பாதுகாக்க மாட்டோம். இறுதியில் இறைவன் அவனுடைய உடலை ஒரு கரையில் ஒதுங்கச் செய்து விட்டான். அவன் குள்ளமான ஒரு மனிதனாக இருந்தான்.

சுருங்கக்கூறின் குற்றம் மற்றும் பாவத்தின் பக்கம் மனிதன் முன்னேறும்போது, பிறகு

لَا يَسْتَأْخِرُونَ سَاعَةً وَلَا يَسْتَقْدِمُونَ

என்ற வசனத்தில் உள்ள விவகாரம்தான் இருக்கிறது. அதாவது அதிலிருந்து ஒரு நொடிப்பொழுதும் பின்னாலும் இருந்து விட முடியாது; முன்னாலும் செல்ல முடியாது. எனவே குறிப்பிட்ட முடிவு காலம் எனும் இன்னல் வந்து விட்ட பிறகு அது முன் பின் செல்வதில்லை. மனிதன் முன்னரே இறைவனோடு தொடர்பு வைத்திருக்க வேண்டும்.

ஆக, நம்மில் இந்த ரமலானில் இருந்து உண்மையான முறையில் பலன் பெற்றவாறு தமது இறையச்சத்தின் தரத்தை இறைவன் நம்மிடம் விரும்பும் அந்தத் தரத்திற்கு கொண்டு வருவதற்கு முயற்சி செய்யக் கூடியவர்கள் நற்பேறு பெற்றவர்களாவார்கள். பிறகு அடுத்த வசனம் நோன்பு பற்றியது. அதில் அல்லாஹ் தஆலா சில அடிப்படையான கட்டளைகளை வழங்கியிருக்கிறான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இந்த கணிக்கப்பட்ட சில நாட்களிலும் அல்லாஹ் உங்கள் மீது நோன்பை கடமையாக்கி இருந்தும் உங்களுக்கு வசதியை வழங்குகின்றான். எனவே நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர்கள் தங்கள் மீது தேவையில்லாத சுமையை சுமத்திக் கொள்ளக் கூடாது. பின்னர் உடல் நலம் பெற்ற பிறகு அல்லது பயணம் முடிவடைந்த பிறகு நோன்புகளை முழுமை செய்து கொள்ள வேண்டும். எனவே கடமையை கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும்; ஆனால், தேவையில்லாத சுமையையும் சுமத்திக் கொள்ளக் கூடாது என்று கூறியுள்ளான்.

அல்லாஹ் இயல்பான மற்றும் திடீரென ஏற்படக் கூடிய நிர்ப்பந்தங்களையும் கருத்தில் கொண்டுள்ளான். எனவே அல்லாஹ் மனிதனின் இறையச்சத்திற்கு மதிப்பளித்தவாறு அதாவது அவன் இறைவனுக்காக ஆகுமான விஷயங்களில் இருந்தும் தன்னை தடுத்துக் கொண்டான் என்று மனிதனுடைய நிர்பந்தங்களில் அவனுக்கு வசதியையும் ஏற்படுத்தி தந்து விட்டான்.

எனவே சில மக்கள் இறைவன் மிகப் பெரும் சுமையை எங்கள் மீது சுமத்தி விட்டான்; சில கட்டளைகள் எப்படி இருக்கின்றவென்றால் அவற்றை நிறைவேற்றுவது மிகவும் கஷ்டமாகும் என்று கூறுகின்றார்கள். அல்லாஹ்வின் எந்த ஒரு கட்டளையும் கஷ்டமானதல்ல. ஒவ்வொன்றுடனும் வசதிகள் உடனே இருக்கின்றன. அல்லது மார்க்கம் எங்கள் மீது சுமையை சுமத்துகிறது அல்லது மார்க்கமற்றவர்கள் அல்லது மார்க்கத்திற்கு எதிராக இருக்கக் கூடியவர்கள் மார்க்கத்தை ஏற்கக் கூடியவர்களுக்கு மத்தியில் குழப்பத்தை உருவாக்குவதற்காக என்ன இது மார்க்கத்தின் கட்டுப்பாடுகளில் பிணைக்கப்பட்டுள்ளீர்கள்? இவையோ உங்களுடைய மனித உரிமைகளைப் பறிக்கின்றன என்று கூறுகின்றார்கள். இந்த வசனத்திலும் இந்த மக்களுக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது. அதாவது நோன்புகள் கடமையாக்கப்பட்டுள்ளன. நோன்பு அல்லாஹ்வின் விருப்பத்தை பெறக் கூடியவர்களாக ஆக்குகின்றது. ஆனால் அவ்வாறு இருந்தும் இறைவன் இயல்பான எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளையும் இறைவன் கருத்தில் கொண்டுள்ளான். மேலும் உங்களுக்கு வசதியை வழங்குகின்றான். ஆண்டின் நடுவில் எந்த நேரத்திலும் உங்களுடைய நோன்புகளை முழுமை செய்து கொள்ளுங்கள். ஆற்றல் படைத்தவர்கள் தங்களுடைய விடுபட்ட நோன்புகளுக்காக ஓரளவு ஃபித்யாவும் கொடுக்க வேண்டும். ஆயினும், அனைவரின் மீதும் கடமை அல்ல. எவர் வசதி படைத்தவரோ அவர் கொடுக்க வேண்டும். இதனால் இரட்டிப்பு நற்கூலி கிடைக்கின்றது. இது நீங்கள் செய்யக் கூடிய ஒரு கூடுதல் நன்மையாக இருக்கும். ஆக, அல்லாஹ்வோ இவ்வாறு வழங்குவதற்கான ஏற்பாடு செய்கின்றான்.

பிறகு பாலூட்டக் கூடிய தாய்மார்கள் இருக்கின்றார்கள். அல்லது நிரந்தர நோயாளிகள் இருக்கின்றார்கள். அவர்களின் நற்பேறுக்கு ஏற்ப ஃபித்யா வழங்குமாறு வழிகாட்டி விட்டான். ஏனெனில், அல்லாஹ் தஆலா மறைவானவற்றை அறிபவனாக இருக்கின்றான். அவன் எண்ணங்களை அறிகின்றான். எனவே நீங்கள் நல்ல எண்ணத்துடன் இதைக் கொடுக்கின்றீர்கள் என்றால், உங்களுடைய ஃபித்யா நோன்பு நோற்பதற்குப் பகரமானதாகும் என்று கூறிவிட்டான். ஃபித்யாவினால் ஏழைகளுக்கு உதவி கிடைக்கின்றது.

ஒரு வகையில் இங்கு மீண்டும் அடியார்களுக்கான உரிமையை செலுத்துவதற்கும் இறை வணக்கத்திற்கான நற்கூலியின் அந்தஸ்தை வழங்கி விட்டான். இப்பொழுது ஃபித்யாவிலிருந்து பலன் பெறுபவர்கள் யார்? ஏழை மக்கள். ஆனால், அதற்கான நற்கூலி இபாதத்திற்கு நிகரானதாக ஆகிவிட்டது. இதுதான் இஸ்லாத்தின் இறைவன் ஆவான். அவன் கருணை இன்றி வேறு ஒன்றுமே இல்லை. பிறகும் மனிதன் அவனுடைய கருணையைப் பெறக் கூடியவனாகவில்லை என்றால், அது அவனுடைய துர்பாக்கியம் ஆகும்.

இந்த கருத்தை மேற்கொண்டு திறந்தவாறு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த ஃபித்யா எதனால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று ஒருமுறை எனது உள்ளத்தில் தோன்றியது. அப்பொழுது நல்வாய்ப்புக்காக என்பது தெரிய வந்தது. இதன் மூலம் நோன்புக்கான நல்வாய்ப்பு அவருக்கு கிடைக்கப் பெற வேண்டும். அல்லாஹ்வே நல்வாய்ப்பு வழங்குகின்றான். ஒவ்வொன்றையும் அல்லாஹ்விடமே நாம் கேட்க வேண்டும்.

எல்லாம் வல்ல இறைவன் முழுமையான ஆற்றல் பெற்றவன் ஆவான். அவன் நாடினால் வயிற்றுப்போக்கு உள்ள ஒருவனுக்கும் நோன்பு வைப்பதற்கான ஆற்றலை வழங்க முடியும். அந்த ஆற்றல் கிடைத்து விட வேண்டும் என்பதே ஃபித்யாவின் நோக்கமாகும். மேலும், இது அல்லாஹ்வின் அருளினால் ஏற்படுகின்றது.

ஆக, என்னுடைய பார்வையில் இறைவா! இது உனது அருளுக்குரிய மாதமாகும்; நான் இதிலிருந்து இழப்பிற்குரியவனாக ஆகப்போகிறேன். அடுத்த ஆண்டு நான் உயிரோடு இருப்பேனா ; மாட்டேனா? என்று தெரியாது அல்லது அந்த விடுபட்ட நோன்புகளை நிறைவேற்ற முடியுமா?முடியாதா? என்று எனக்குத் தெரியாது என்று மனிதன் துஆ செய்ய வேண்டும். அது மிகச் சிறந்ததாகும். மேலும் அவனிடம் நல்வாய்ப்பை வேண்ட வேண்டும். இப்படிப்பட்ட உள்ளத்துக்கு இறைவன் கண்டிப்பாக ஆற்றலை வழங்குவான் என்று எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கின்றது.

எனவே நோன்புகளை வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் ஃபித்யாவையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்ள வேண்டும்; நோன்புகள் நோற்பதற்கும் நல்வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற நிய்யத்தில் கொடுக்க வேண்டும். ஆனால், எவ்வாறாயினும் எங்கு அல்லாஹ் சலுகை அளித்து இருக்கின்றானோ அதன்படி அமல் செய்வதும் அவசியமாகும். இதுதான் இறையச்சம் ஆகும். இறைவனுடைய கட்டளைக்கு கட்டுப்படுவது தான் உண்மையான இறையச்சம் ஆகும். எனவே இந்தக் கருத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

அசல் விஷயம் என்னவென்றால், திருக்குர்ஆனின் சலுகைகள் படி அமல் செய்வதும் இறையச்சமாகும். அல்லாஹ் தஆலா பயணிகள் மற்றும் நோயாளிகளுக்கு மற்ற நாட்களில் நோன்பு வைப்பதற்கான அனுமதியையும் சலுகையையும் வழங்கி இருக்கின்றான். எனவே அந்தக் கட்டளை படியும் அமல் செய்ய வேண்டும். நான் படித்திருக்கின்றேன். பெரும்பாலான பெரியோர்கள், ஒருவர் பயணத்திலோ அல்லது நோயிலோ நோன்பு வைக்கின்றார் என்றால் அது குற்றமாகும் என்றே கூறியிருக்கின்றார்கள். பாவமாகும்.

ஏனெனில், நோக்கமோ அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதாகும். தனது இஷ்டத்துக்கு செயல்படுவது அல்ல. அல்லாஹ்வின் திருப்தி கட்டுப்படுத்தலில் இருக்கிறது. அவன் என்ன கட்டளை வழங்குகின்றானோ அதற்குக் கட்டுப்பட வேண்டும். தன் தரப்பிலிருந்து அதில் எந்தவோர் அடிக்குறிப்பையும் எழுதிக் கொள்ளக் கூடாது. தன்னுடைய சுய விளக்கங்களைக் கொடுக்கக் கூடாது.

உதாரணமாக இன்றைய நாட்களில் அறிஞர்கள் தங்களுடைய அறிவின் மீது இருக்கக் கூடிய அகந்தையால் இவ்வாறு

செய்கின்றார்கள். இப்பொழுதோ சமூக ஊடகத்தில் அவர்களுக்கு ஒரு தளம் கிடைத்து விட்டது. அதிலோ மார்க்கச் சட்டம் தொடர்பான விநோதமான நகைப்புக்குரிய விஷயங்களையும் மார்க்கத் தீர்ப்புகளையும் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

எவ்வாறு இருப்பினும், அன்னார் (அலை) கூறுகிறார்கள்: அவனோ

مَنْ كَانَ مِنْكُمْ مَّرِيْضًا
اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ

என்று கட்டளையிட்டுள்ளான். எனவே உங்களில் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் அத்தனை நோன்புகளை மற்ற நாட்களில் முழுமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதில் இப்படிப்பட்ட பயணமாக இருந்தால் அல்லது இப்படிப்பட்ட நோயாக இருந்தால் என்று வேறு எந்தவொரு நிபந்தனையையும் விதித்து விடவில்லை.

பிறகு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எவர் ஒருவர் நோயாளியாகவோ, பயணியாகவோ இருக்கக் கூடிய நிலையில் ரமலான் மாதத்தில் நோன்புகளை நோற்கின்றாரோ அவர் இறைவனின் தெளிவான கட்டளைக்கு மாறு செய்கின்றார். நோயாளிகளும், பயணிகளும் நோன்பு வைக்கக் கூடாது என்றும், நோயிலிருந்து குணமடைந்த பிறகும் பயணம் முடிந்த பிறகும் நோன்புகளை வைக்க வேண்டும் என்றும் இறைவன் தெளிவாகக் கூறிவிட்டான்.

எல்லாம் வல்ல இறைவனின் இந்தக் கட்டளையின்படி அமல் செய்ய வேண்டும். ஏனெனில், ஈடேற்றம் அவனுடைய அருளால் தான் கிடைக்குமே அன்றி, தம்முடைய அமல்களின் ஆற்றல்களைக் காட்டி எவரும் ஈடேற்றத்தைப் பெற முடியாது. நோயாளிகளும், பயணிகளும் நோன்பு வைப்பார்கள் என்றால் கண்டிப்பாக அவர்கள் கட்டளைக்கு மாறு செய்தது அவர்களுக்குப் பொருந்தும்.

ஒரு நபர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ரமலான் மாதத்தில் பயணத்தின் நிலையில் நோன்பு வைத்தல் மற்றும் தொழுகையைப் பற்றி கேள்வி கேட்டார். அதற்கு, ரமலானில் பயணத்தின் நிலையில் நோன்பு வைக்காதீர் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே!எனக்கு நோன்பு வைப்பதற்கான ஆற்றல் இருக்கிறது என்று அந்த நபர் கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீர் அதிகம் ஆற்றல் பெற்றவரா அல்லது அல்லாஹ்வா? என்று அவரிடம் கேட்டார்கள்.

மேலும் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் எனது உம்மத்தின் நோயாளிகள் மற்றும் பயணிகளுக்கும் ரமலானில் பயணத்தின் நிலையில் நோன்பு வைக்காமல் இருப்பதை ஒரு ஸதக்காவாக ஒரு சலுகைக்காக ஆக்கி விட்டான். அவன் உங்களில் ஒருவருக்கு ஒன்றை அன்பளிப்பாக வழங்கி, அந்த மனிதன் அந்தப் பொருளை அன்பளிப்பு வழங்கியவனுக்குத் திருப்பி கொடுத்து விடுவதை உங்களில் எவராவது விரும்புவாரா? எனவே அல்லாஹ்வின் கட்டளைகள்படி அமல் செய்யுங்கள். இதுவே இறையச்சம் ஆகும். எந்த நன்மையும் அவன் கூறும்பொழுது நிறைவேற்றுங்கள். எந்த நேரத்தில் நிறைவேற்றுமாறு கூறுகிறானோ அப்பொழுது நிறைவேற்றுங்கள். எதை விடுமாறு கூறுகிறானோ அதை விட்டு விடுங்கள்.

அல்லாஹ் தஆலா நமக்கு அல்லாஹ்வின் விருப்பத்தின் வழியில் நடந்தவாறு இறையச்சத்தோடு ரமலானைக் கழிப்பதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!நமக்கு நம்முடைய இறையச்சத்தின் தரத்தை உயர்த்துவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானா! நாம் நோன்பில் இருந்து தப்பிப்பதற்காக சாக்குப் போக்கு தேடக் கூடியவர்களாக ஆகாமல் இருப்போமாக!

எப்பொழுதும் இஸ்லாத்தின் அழகான போதனைகள்படி செயல்பட கூடியவர்களாக இருப்போமாக! இந்த ரமலானில் நாம் அல்லாஹ் தஆலாவின் எண்ணற்ற அருள்களைப் பெறக் கூடியவர்களாக இருப்போமாக! ஒவ்வொரு நாளும் நமக்கு பரகத்துகள் மற்றும் கருணைகளுக்கான வழிவகைகளைக் கொண்டு வரட்டுமாக! நாம் ரமலானில் இருந்து உண்மையான முறையில் பலன் பெறக்கூடியவர்களாக ஆவோமாக! இந்த ரமலான் நம்மை அல்லாஹ் தஆலாவுக்கு மிக அருகில் கொண்டு செல்லக் கூடியதாக ஆக்கட்டுமாக! நமக்கு ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய துஆக்களை செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைக்கட்டுமாக!

ஜமாஅத்தின் முன்னேற்றங்களுக்காகவும், எல்லா விதமான சிரமங்கள் அகல்வதற்காகவும் முழு உலகின் அஹ்மதிகள் துஆ செய்யுங்கள். அரசாங்கங்கள் மற்றும் ஒவ்வொரு தீயவரின் தீங்கிலிருந்து அல்லாஹ் தஆலா நம்மைப் பாதுகாத்து வைப்பானாக! இறைவழியில் சிறை சென்றவர்களின் விடுதலைக்காகவும் துஆ செய்யுங்கள். அவர்களில் சிலர் பெரும் சிரமத்தில் சிக்கியுள்ளார்கள். மேலும் இவ்வாறு துஆ செய்யுங்கள்.

அல்லாஹ் தஆலாவின் ஆடையை நம்முடைய எந்தவொரு தடுமாற்றத்தின் காரணமாகவும் ஒருபோதும் விட்டு விடாத வகையில் பற்றிப் பிடித்திருப்போமாக! மேலும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருள்களின் மழை எப்பொழுதும் நம் மீது பொழிந்து கொண்டே இருக்கட்டுமாக!

முஸ்லிம் உலகத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் தஆலா அவர்களுக்கு அறிவையும், புரிதலையும் வழங்குவானாக! அவர்கள் வந்திருக்கக் கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக ஆவார்களாக! போர்களின் தீய தாக்கங்களிலிருந்து தப்பிப்பதற்காகவும் துஆ செய்யுங்கள். முஸ்லிம் நாடுகளில் ஆற்றலைப் பெறுவதற்காக எந்த போர்கள் செய்யப்படுகின்றனவோ மேலும் அதன் விளைவாக அப்பாவி பொதுமக்கள் அநீதி எனும் ஆட்டுரலில் அரைக்கப்படுகிறார்களோ அல்லாஹ் தஆலா அவர்கள் மீதும் கருணை புரிந்தவாறு அந்த அநீதி இழைப்பவர்களிடமிருந்து விடுதலை அளிப்பானாக

உலகின் பொதுவான நிலைமைகளுக்காவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் தஆலா போரிலிருந்தும் அதன் பயங்கரமான விளைவுகளில் இருந்தும் காப்பாற்றுவானாக. போர் நடக்கும் சூழ்நிலையில் அஹ்மதிகளும் அதனால் பாதிக்கப்படுவார்கள் என்பது வெளிப்படையான விஷயம் ஆகும்.

அல்லாஹ் தஆலா அவர்களை அதிலிருந்து பாதுகாத்து வைப்பானாக. அதிலிருந்து தப்பிப்பதற்காகவும் ஒவ்வோர் அஹ்மதியும் தனது இறையச்சத்தின் தரத்தை மேம்படுத்த வேண்டும். இதைத்தான் ஹஸ்ரத்!வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்: அல்லாஹ் தஆலா எல்லாருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. இங்கு யூ.கேவிலும் முஸ்லிம்களுக்கு நெருக்கடி கொடுப்பதற்கு முயற்சி செய்யப்படுவதாகத் தெரிகிறது. பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால், இது முஸ்லிம்களைக் குறிவைப்பதற்காக என்பது பொதுவான ஆய்வாளர்களின் சிந்தனையாகும்.

எவ்வாறு இருப்பினும், இதற்குப் பின்னால் என்ன இருக்கிறது? இந்த மக்களின் எண்ணங்கள் என்ன? என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஆனால், நாம் இவ்வாறு துஆ செய்ய வேண்டும்: அல்லாஹ் தஆலா நம்மையும் இங்குள்ள மற்ற முஸ்லிம்களையும் அதன் தீங்கிலிருந்து பாதுகாத்து வைப்பானாக!

தமிழாக்கம்
மவ்லவி அதாவுல் முஃக்னீ

* * * * *


Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9


**1-ம் பக்கத் தொடர்ச்சி..**
**(மல்ஃபூஸாத்)**

வெற்றிகளை இறைவனை அடையாளம் காண்பதற்கான ஒரு வழிமுறையாக ஆக்கிக் கொள்ளுங்கள். உங்களது தைரியம் மற்றும் முயற்சியின் மீது பெருமை கொள்ளாதீர்கள். இந்த வெற்றி நமது ஒரு திறமை மற்றும் உழைப்பின் விளைவாகும் என்று கருதாதீர்கள். மாறாக எவருடைய உண்மையான முயற்சியையும் வீணாக்காத அந்த கருணை மிக்க இறைவன் நமது உழைப்பிற்கு கனி வழங்கினான் என்று சிந்தியுங்கள்.

**நம்பிக்கையாளர் மற்றும் நிராகரிப்பாளரின் வெற்றியில் வித்தியாசம்**

இந்த விதிமுறையை நினைவிற் கொள்ளுங்கள். நம்பிக்கையாளரின் பணி இதுவாகும். அதாவது அவருக்கு வழங்கப்படும் ஒரு வெற்றியின் மீது அவர் வெட்கம் கொள்கின்றார். மேலும் இறைவன் தனது அருளை புரிந்தான் என்று அவர் இறைவனை புகழ்கின்றார். மேலும் அவர் இவ்வாறு தமது பாதத்தை முன்னெடுத்து வைக்கின்றார். மேலும் அவர் ஒவ்வொரு சோதனையின் போதும் உறுதிப்பாட்டுடன் திகழ்ந்து அருளைப் பெறுகின்றார். மேலும் வெளிப்படையில் ஒரு இந்து மற்றும் நம்பிக்கையாளருடைய வெற்றி ஒரு வகையில் ஒப்புமை கொண்டிருக்கின்றது. ஆனால், நினைவிற் கொள்ளுங்கள். நிராகரிப்பாளரின் வெற்றி வழிகேட்டின் வழியாகும். மேலும் நம்பிக்கையாளரின் வெற்றியின் மூலம் அவருக்கு அருட்கொடைகளுக்கான வாசல்கள் திறக்கின்றன. நிராகரிப்பாளரின் வெற்றி அவரை வழிகேட்டின் பக்கம் அழைத்துச் செல்கின்றது. அவர் இறைவன் பக்கம் திரும்புவதில்லை. இன்னும் கூறப்போனால் தனது உழைப்பு, அறிவு, மற்றும் திறமையை இறைவனாக்கிக் கொள்கின்றார். ஆனால் நம்பிக்கையாளர் இறைவன் பக்கம் குனிந்து இறைவனிடமிருந்து ஒரு புதிய ஞானத்தைப் பெற்றுக் கொள்கின்றார். மேலும் இவ்வாறு ஒவ்வொரு வெற்றிக்குப் பிறகு அவரது இறைவனுடன் அவருக்கு ஒரு புதிய விவகாரம் துவங்கி விடுகின்றது. அவரிடத்தில் மாற்றம் ஏற்படத் துவங்கிவிடுகின்றது.எனது ஈமான் இதுவே ஆகும். அதாவது மனிதன் உலகில் எல்லா வகையான இழிவிலிருந்தும், கடினத்திலிருந்தும் தப்பிக்க விரும்புகின்றான் என்றால் பின்னர் அவனுக்கு ஒரே வழிதான் உள்ளது. அதாவது அவன் இறையச்சமுடையவராக ஆகிவிட வேண்டும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 134, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * *

# ஜுமுஆ பேருரை

**வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி குறித்த முன்னறிவிப்பின் சில அம்சங்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்களின் அருளுக்குரிய இருப்பின் மீது முழுமையடைந்ததன் பின்னணியில் நீதியை விரும்பக் கூடிய மற்றும் ஜமாஅத்தைச் சாராத சில சகோதரர்களின் தாக்கங்கள்**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் 52 ஆண்டு கால கிலாஃபத் காலகட்டத்தின் ஒவ்வொரு நாளும் இந்த முன்னறிவிப்பு நிறைவேறியதற்கான அடையாளத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது

**நான் இன்று வரை இதுபோன்ற அறிவுப்பூர்வமான உரையாடலையும் ஆதாரப்பூர்வமான உரையையும் எந்தவொரு முஸ்லிமுடைய நாவிலிருந்தும் செவிமடுத்ததில்லை. உங்களது கலீஃபா மாபெரும் அறிஞர் ஆவார் என்றும் மார்க்க உலகில் அவரது பார்வை மிகவும் ஆழமானது என்றும் தெரிய வருகின்றது ( அமெரிக்க பாதிரியார்)**

**பாகிஸ்தான் மற்றும் ஏமனின் அஹ்மதிகளுக்காகவும், பாலஸ்தீனியர்களுக்காகவும் துஆ செய்வதற்கான அறிவுரை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 23 பிப்ரவரி 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **தப்லீஃக்** மாதம் **23ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி.....**

ஜமாஅத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது அன்னாருடைய மிகப் பெரிய சாதனை என்னவென்றால், இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு காதியான் அன்னாரிடம் இருந்து பறிக்கப்பட்டபோது அன்னார் ரப்வாவை இரண்டாவது தலைமையகமாக உருவாக்கினார்கள்.

லாஹூர் ஜமாஅத்தைச் சார்ந்தவர்களின் மொழியாக்கப் பத்திரிகையான தி லைட்டில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மரணத்தைக் குறித்து எழுதும்போது, A Great Nation builder என்ற தலைப்பில் 1965 நவம்பர் 16-ம் தேதி இதழில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமாகிய ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்களின் வாழ்க்கை அதிகமதிகமான சம்பவங்களை கொண்டதாக இருக்கின்றது. நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய எண்ணற்ற மகத்துவ மிக்க சாதனைகளாலும், திட்டங்களாலும் அது நிறைந்து இருந்தது.அது தற்போது மரணத்தால் முற்றுப் பெற்றுள்ளது. அறிவியல் ஞானங்களால் நிறைந்திருந்த ஒரு தன்னிகரற்ற ஆளுமையாக அன்னார் இருந்தார்கள். கடந்த அரை நூற்றாண்டில் மார்க்க அறிவு முதல் இஸ்லாமியப் பிரச்சாரம் வரையிலும் அதேபோன்று அரசியல் அமைப்பு போன்ற பல்வேறு தளங்களிலும் மர்ஹூம் அவர்கள் தமது தலைமைத்துவம், செயல்பாடுகள், சிந்தனைகள் போன்ற தமது தனித்துவமான தாக்கத்தின் ஆழமான தாக்கங்களை விட்டுச் சென்றுள்ளார்கள். உலகம் முழுவதும் விரித்து வைக்கப்பட்டுள்ள இஸ்லாமிய வலையாக இருக்கட்டும்; நாலாப் புறமும் கட்டப்பட்டு வருகின்ற பள்ளிவாசல்களின் பணிகளாக இருக்கட்டும்; ஆஃப்ரிக்கா போன்ற பரந்த பழைய நாடுகளில் நீண்ட காலமாக நிலைபெற்றுள்ள கிறிஸ்தவ மிஷன்களை வேரோடு பிடுங்கி எறியக் கூடிய இஸ்லாத்தின் தப்லீஃக் பணியாக இருக்கட்டும்; இவை மர்ஹூம் அவர்களின் தெளிவான சாதனைகளாகும். மர்ஹூம் அவர்கள் தெளிவான செயல்திட்டங்களை உருவாக்குவதிலும், அன்னாரின் நிர்வாகத் திறன்களும், களைப்படையாத அன்னாரின் தொடர் முயற்சிகளும் ஒரு நிலையான நினைவுகளை கொண்டுள்ளது. தம்மை பின்பற்றக் கூடிய மக்களிடத்தில் இந்த அளவு நேசத்தையும், தியாக மனப்பான்மையையும் மர்ஹூம் அவர்கள் உருவாக்கி இருக்கின்றார்கள். தற்காலத்து மக்களிடையே மிக அரிதாகவே இத்தகைய தலைவர்கள் காணக் கிடைப்பார்கள். அன்னாரைப் பின்பற்றக் கூடிய மக்களிடத்தில் இந்த உத்வேகமான அன்பும், தியாகமும் கிடைத்தது.

அன்னாருடைய வாழ்வு வரை மட்டும் அது கிடைக்கவில்லை. மாறாக அன்னாரின் வாழ்விற்கு பிறகும் கூட அது வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. நாட்டின் பல பகுதிகளிலிருந்து அறுபதாயிரம் மக்கள் தம்மை விட்டுப் பிரிந்த இமாமிற்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக பித்து பிடித்தவர்களைப் போன்று வந்து கொண்டிருக்கின்றார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் மிர்ஸா ஸாஹிப் அவர்களின் பெயர் சமுதாயத்தைக் கட்டமைத்த ஒரு மகத்துவ மிக்கத் தலைவரைப் போன்று என்றும் உயிருடன் இருக்கும். அன்னார் மிகவும் கடுமையான கஷ்டங்களின்போதும் ஓர் உறுதியான ஜமாஅத்தை நிலைநாட்டிக் காட்டியுள்ளார்கள். எவ்வாறான ஆற்றலாக மாற்றிக் காட்டினார்கள் என்றால், நம்மால் அதனை கண்டும் காணாமல் இருக்க முடியாது.

கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் லாஹூர் ஜமாஅத்தின் செய்தித்தாளும் கூட அன்னார் ஒரு மாபெரும் தலைவராக இருந்தார்கள் என்ற இந்த விஷயத்தை வெளிப்படுத்த முடியாமல் இருக்க முடியவில்லை.

எவ்வாறு இருப்பினும், இது அந்த மக்கள் மனம் திறந்து வெளிப்படுத்திய சிந்தனைகள் ஆகும். இதேபோன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களைக் குறித்து அந்நியர்களின் எண்ணற்ற கருத்துகள் உள்ளன. இது தவிர, அன்னார் பல தலைப்புகளில் ஜமாஅத்திற்கும், முஸ்லிம்களுக்கும் பொதுவாக வழங்கிய வழிகாட்டல்களும், அறிவுரைகளும் உள்ளன. அவை ஏராளமான தலைப்புகளைக் கொண்டதாக இருக்கின்றன. பல தொகுதிகளைக் கொண்டதாக இருக்கின்றன. அவற்றில் சில அச்சிடப்பட்டு வெளிவந்து விட்டன. சில அச்சிடப்பட்டு வருகின்றன. சொற்பொழிவுகளின் தொகுதிகள் மட்டுமே 35,36 தொகுதிகள் உள்ளன. 26,27 அல்லது 28 குத்பாக்களின் தொகுதிகள் இருக்கின்றன. எவ்வாறு இருப்பினும் பல அறிவுரைகளை அன்னார் (ரலி) வழங்கியுள்ளார்கள். எல்லாவற்றையும் விட பெரிய விஷயம் என்னவென்றால் எந்தவொரு பள்ளிக் கூடத்திலோ அல்லது மதரஸாவிலோ பல்கலைகழகத்திலோ அன்னார் (ரலி) எதுவும் படித்திராதபோதிலும் திருக்குர்ஆனின் ஞானத்தை அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியிருந்தான். அதற்கு நிகரான ஒன்றை நம்மால் காண முடியாது. இதைக் குறித்தும் அந்நியர்களின் எண்ணற்ற கருத்துகள் இருக்கின்றன. கடந்த காலங்களிலும் இதனை நான் எடுத்துரைத்து வந்துள்ளேன். தற்போது பழைய காலங்களில் அச்சிடப்படாத அன்னாரின் குறிப்புகளும் கிடைத்துள்ளன அல்லது குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகளிலிருந்து திருக்குர்ஆனின் விளக்கங்களும் கிடைத்துள்ளன. அவை அச்சிடப்படவில்லை. அவை தஃப்ஸீரே கபீர் என்ற திருக்குர்ஆன் விளக்கவுரையில் இடம் பெறவில்லை. தஃப்ஸீரே கபீர் என்பது பத்து தொகுதிகளில் உள்ளது. அவற்றை விட இரண்டு மடங்கு அதிகமாக அந்த விளக்கவுரை குறிப்புகளில் உள்ளன. இன்ஷா அல்லாஹ் விரைவில் அவை அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு விடும். இந்த அனைத்தையும் அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியிருந்தான். அல்லாஹ் அந்த முன்னறிவிப்பை நிறைவேற்றி விட்டான். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களைக் குறித்த இந்த முன்னறிவிப்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு மகத்துவ மிக்க சான்றாகவும், முன்னறிவிப்பாகவும் இருக்கின்றது. அது நமது ஈமானை அதிகரிக்கச் செய்யக் கூடிய வழிமுறையாக உள்ளது. பல நூல்கள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு விட்டன. எவர்களுக்கு உருது தெரியாதோ அவர்கள் இந்த அறிவுக் கருவூலத்திலிருந்து பயன் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதைக் குறித்து நான் முன்னரும் கூறியிருக்கின்றேன். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த அறிவுக் கருவூலத்திலிருந்து பயன் பெறுவதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக.

தற்போது பாகிஸ்தானில் ஜமாஅத்திற்கு மீண்டும் எதிர்ப்பின் அலை துவங்கியுள்ளது. தேர்தலில் தோல்வியடைந்த

அரசியல்வாதிகள் மற்றும் மவ்லவிமார்கள் அல்லது தங்களது விருப்பத்திற்கு ஏற்ப எவர்களுக்கு முடிவுகள் கிடைக்கவில்லையோ அவர்களின் பெரும் எண்ணிக்கை குழப்பத்தை பரப்புவதற்காக அஹ்மதிகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இது அவர்கள் எப்போதும் பின்பற்றும் வழிமுறையாகும். அவர்கள் தோல்வியடையும் போது மலிவான விளம்பரத்திற்காக அஹ்மதிகளுக்கு எதிராக எதிர்ப்பின் அலைகளை உருவாக்கி விடுகின்றனர். தற்காலத்திலும் இதைத்தான் இந்த மக்கள் செய்வதற்கு முயற்சி செய்து வருகின்றனர். அவர்கள் தங்களது சுய நோக்கத்திற்காக இதனை செய்கின்றனர்.இனிமேலும் செய்வார்கள். எனவே அஹ்மதிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய அதே சமயத்தில் துஆக்கள் செய்தவாறு தானதருமங்களையும் செய்ய வேண்டும். அல்லாஹ் அஹ்மதிகளை பாதுகாப்பானாக. ஏமனுடைய அஹ்மதிகளுக்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கும் எளிமையை உருவாக்குவானாக. அவர்களில் பலர் சிறைவாசத்தை அனுபவித்து வருகின்றார்கள். அல்லாஹ் அவர்களின் விடுதலைக்கான ஏற்பாட்டையும் விரைவில் செய்வானாக.

பாலஸ்தீனியர்களின் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக. பெரும் வல்லரசுகளின் அநீதிகளிலிருந்து அவர்களுக்கு இரட்சிப்பை வழங்குவானாக. கானாவில் ஆண்டு மாநாடு நடைபெற்று வருகின்றது. நேற்றிலிருந்து ஆரம்பமாகி இருக்கின்றது. நாளை சனிக்கிழமை கடைசி நாளாகும். எல்லா வகையிலும் வெற்றி அடைவதற்காக துஆ செய்யுங்கள். அங்கு ஜமாஅத் ஏற்படுத்தப்பட்டு நூற்றாண்டு நிறைவடைந்ததையொட்டி நடத்தப்படும் மாநாடாகும். நாளை இங்கிருந்து இன்ஷா அல்லாஹ் ஆண்டு மாநாட்டிற்கான எனது சொற்பொழிவு இருக்கும். அல்லாஹ் எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக.

* * * * *

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com

my grizzly india
my grizzly india
my grizzly india

12ம்பக்கத் தொடர்ச்சி...
(குத்பா பேருரை -09.03.24)

நிகழ்ந்தது. மேலும் அன்னாரின் உடலில் 14 காயங்கள் ஏற்பட்டிருந்தன. (ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், தொகுதி 4, பக்கம் 203 தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

இந்த சம்பவத்தை நான் முன்னரும் எடுத்துரைத்திருக்கின்றேன். சிலவற்றில் சில புதிய விஷயங்கள் இருக்கின்றன. ஒருசில புதிய வாக்கியங்களும் இருக்கின்றன. வேறு ஒரு கோணமும் இருக்கின்றது. எனவே நான் மீண்டும் எடுத்துரைத்து விடுகின்றேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போரிலிருந்து மதீனாவிற்கு திரும்பியது தொடர்பான குறிப்பு அறிவிப்புகளில் கிடைக்கின்றது. உஹது போர் நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போர் ஷஹீதுகளுக்கான கஃபனிடுதல் மற்றும் அவர்களின் நல்லடக்கத்திற்கு பிறகு மதீனாவிற்கு திரும்பி வந்து விட்டார்கள்.

(தாயிராயே மஆருஃப், ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்ற நூல், தொகுதி 7, பக்கம் 55, லாஹூர் பதிப்பு)

மஹ்ரிஃப் தொழுகை மதீனாவில் நிறைவேற்றப்பட்டது என்ற குறிப்பும் கிடைக்கின்றது. ஆக, ஒரு நூலாசிரியர் எழுதியுள்ளார்: உஹது மைதானத்திலிருந்து மதீனா திரும்பி வந்தவுடன் மஹ்ரிப் நேரம் ஆனபோது, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பாங்கு கொடுத்தார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃது பின் உபாதஃ (ரலி) மற்றும் ஸஃது பின் மஆஸ் (ரலி) ஆகியோரின் உதவியுடன் மஸ்ஜிதிற்கு வந்தார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீண்டும் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். இஷா தொழுகைக்கான நேரம் ஆனபோது ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் மீண்டும் பாங்கு கொடுத்தார்கள். ஆனால், இறைத் தூதர் (ஸல்) அவர்களால் தூக்கத்தின் காரணமாக வருகை தரமுடியவில்லை. ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். தூங்கிக் கொண்டிருந்தார்கள். எனவே பாங்கிற்கு பிறகு தொழுகைக்கான அந்த நேரத்தில் அன்னாரால் வருகை தரமுடியவில்லை. ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் வாசலிலேயே அன்னாரின் வருகைக்காக காத்திருந்து அமர்ந்திருந்தார்களே தவிர திரும்பி வந்து தொழுகையை நடத்தி விடவில்லை. இன்னும் கூறப்போனால் அன்னாரின் வருகைக்காக காத்திருந்தார்கள். இரவின் பெரும்பகுதி கழிந்து விட்டபோது ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தொழுகைக்காக விளித்தார்கள். அன்னார் (ஸல்) தொழுகைக்காக வருகை தந்துவிட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலை முன்னரை விட சிறந்ததாக இருந்தது.இஷா தொழுகையை நடத்தி விட்டு அன்னார் (ஸல்) வீட்டிற்கு சென்று விட்டார்கள். தொழுகைக்கான இடம் முதல் வீடு வரை இறைத் தூதரின் தோழர்கள் அணி வகுத்து நின்றிருந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் அன்னார் (ஸல்) தனியாகவே வீட்டிற்கு சென்று விட்டார்கள். இந்தமுறை எவருடைய உதவிக்கான தேவையும் ஏற்படவில்லை. முன்னர் மஹ்ரிப் தொழுகையில் வருகை தந்திருந்தார்கள். அப்போது பிறரின் உதவியுடன்தான் வருகை புரிந்திருந்தார்கள். பின்னர் ஓய்வெடுத்தார்கள்.

இஷா தொழுகையை தாமதமாக தொழுதார்கள். மேலும் தொழுகைக்காக வருகை தந்தபோது உதவிக்கான தேவை ஏற்படவில்லை. இதற்கிடையில் சில பெண்மணிகள் ஹஸ்ரத் ஹம்ஸாவிற்காக ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்ததை அன்னார் (ஸல்) கண்டார்கள். அப்போது அன்னார் (ஸல்) அந்தப் பெண்மணிகளை அந்த செயலிலிருந்து தடுத்து விட்டார்கள். இந்த விஷயமும் கடந்த குத்பாவில் எடுத்துரைக்கப்பட்டு விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டிற்கு திரும்பிச் சென்று விட்டபோது பாதுகாவலர்களைத் தவிர மற்ற அனைத்து ஆண்களும், பெண்களும் தத்தமது வீடுகளுக்கு சென்று விட்டனர். ( நூல்: தாயிராயே மஆருஃப் ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தொகுதி 7, பக்கம் 63, லாஹூர் பதிப்பு) பின்னர் டியூட்டியில் இருந்தவர்கள் மட்டுமே அங்கு இருந்தனர்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

எல்லா ஏற்பாடுகளையும் முடித்து விட்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மாலைப் பொழுதையொட்டி மதீனாவை நோக்கி புறப்பட்டார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 502)

அதாவது எல்லாப் பணிகளும் முடிவடைந்தன. காயமுற்றிருந்தார்கள். எனவே உடனடியாக வந்து விட்டார்கள் என்று இல்லை. மாறாக அனைத்துப் பணிகளையும் நிறைவு செய்தார்கள்.

மதீனத்துப் பெண்மணிகளின் பொறுமை மற்றும் மனநிறைவிற்கான முன்மாதிரி:

இது தொடர்பாக முன்னரும் நான் பெண்களின் உதாரணத்தை கூறியிருக்கின்றேன். இன்னும் சில அறிவிப்புகளும் இருக்கின்றன.

ஹஸ்ரத் ஹம்னா பின் ஜஹஷ் (ரலி) அவர்களின் உணர்வுகள் என்னவாக இருந்தன? இறைத் தூதர் (ஸல்) உஹது போருக்குப் பிறகு மதீனாவிற்கு திரும்பியபோது அன்னாரை ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களின் மனைவி ஹஸ்ரத் ஹம்னா பின் ஜஹஷ் (ரலி) அவர்கள் சந்தித்தார்கள். அன்னாரின் சகோதரர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹஷ் (ரலி) அவர்களின் ஷஹீதான செய்தியை அன்னாருக்கு மக்கள் கொடுத்தனர். அப்போது அன்னார் (ரலி)

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

என்று கூறினார்கள். மேலும் அன்னாரின் பாவமன்னிப்பிற்காக துஆ செய்தார்கள். பின்னர் அன்னாரின் மாமா ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஷஹீதாகிவிட்ட செய்தியை அன்னாருக்கு மக்கள் கூறினர். அப்போது அன்னார் (ரலி)

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

என்று கூறினார்கள். மேலும் அன்னாரின் பாவமன்னிப்பிற்காக துஆ செய்தார்கள்.

தமிழாக்கம்
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...

# ஜுமுஆ பேருரை

**உஹுது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆ ஒப்புக் கொள்ளப்படுதல் மற்றும் ஸஹாபா பெருமக்கள் மற்றும் ஸஹாபியாக்களின் தியாகங்கள் மற்றும் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது அவர்கள் கொண்டிருந்த நேசம் ஆகியவை தொடர்பான ஈமானை வலுவூட்டும் சம்பவங்களைப் பற்றிய குறிப்புகள்**

**அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தாயும், தந்தையும் தங்கள் மீது அர்ப்பணமாகட்டும்! தாங்கள் நலமுடன் இருக்கும்போது பின்னர் எனக்கு எந்தப் பாதிப்பைக் குறித்தும் கவலை இல்லை**

**உஹுது போரின்போது ஒருமுறை இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: உம் மீது எனது தாயும், தந்தையும் அர்ப்பணமாகட்டும்! நீர் தொடர்ந்து அம்பை எய்து கொண்டே செல்வீராக!**

**ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் தமது வாழ்நாளின் இறுதி வரை இந்த சொற்களை மிகவும் பெருமிதத்துடன் எடுத்துரைத்து வந்தார்கள்.ஸஹாபா பெருமக்கள் உண்மையில் இறை நேசர்களாக இருந்தனர். இறைவன் இறைத் தூதர் (ஸல்) அவர்களை நேசித்து வந்தான். எனவே ஸஹாபிகள் அன்னார்(ஸல்) மீது நேசம் கொண்டிருந்தார்கள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 08 மார்ச் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **அமான்** மாதம் **08ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۝ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۝

உஹுது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஸஹாபி ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களின் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்காக துஆ செய்தார்கள். அது ஒப்புக் கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பாக இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் ஆயிஷா பின்த் ஸஃது (ரலி) அவர்கள் தமது தந்தையார் ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: மக்கள் திரும்பி வந்து தாக்குதல் தொடுத்தபோது நான் ஒரு பக்கமாக சென்றுவிட்டேன். என்னிடமிருந்து அவர்களை அகற்றிவிடுவேன்; அல்லது நான் சுயமே இரட்சிப்பு பெற்று விடுவேன் ; அல்லது நான் ஷஹீதாகி விடுவேன் என்று நான் சுயமே கூறினேன் அப்போது திடீரென செந்நிற முகம் கொண்ட ஒரு நபரை நான் பார்த்தேன். கூறுகின்றார்கள்: இணை வைப்பாளர்கள் அவர்களை மேலோங்கி விட இருந்தார்கள். அப்போது அந்த நபர் தமது கையை கூழாங்கற்களால் நிறைத்து அவற்றை எறிந்தார்கள். அப்போது திடீரென எனக்கும் அவருக்குமிடையில் மிக்தாத் வந்துவிட்டார்கள். நான் மிக்தாத் அவர்களிடம் கேட்பதற்கு எண்ணம் கொண்டேன். அப்போது, அன்னார் (ரலி) என்னிடம் இவ்வாறு கூறினார்கள்: ஸஃதே! இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களாக இருந்தார்கள். அன்னார் (ஸல்) உன்னை அழைத்துக் கொண்டிருந்தார்கள் என்று பின்னர் கூறினார்கள்.

நான் எழுந்து நின்றேன். மேலும், எனக்கு எந்தத் துன்பமும் ஏற்படாததைப் போன்று எனக்கு தோன்றியது. முதலில் காயமுற்ற நிலையில் இருந்தார்கள் அல்லது வேதனை இருந்தது. கூறுகின்றார்கள்: அதன் பிறகு நான் இந்தக் குரலைக் கேட்டு உடனடியாக எழுந்து விட்டேன். எனக்கு எந்த வேதனையும் ஏற்படாததைப் போன்று எனக்கு தோன்றியது. கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அப்போது அன்னார் (ஸல்) என்னை தமக்கு முன்னால் அமரச் செய்து விட்டார்கள். மேலும் நான் அம்பு எய்த முற்பட்டேன். அப்போது, அல்லாஹ்வே! (இது) உனது அம்பாகும். நீ இதனைக் கொண்டு உனது எதிரியை கொன்று விடுவாயாக என்று நான் கூறுவேன். மேலும் அல்லாஹ்வே !நீ ஸஃதின் துஆவை ஒப்புக் கொண்டு விடுவாயாக! அல்லாஹ்வே! ஸஃதின் குறியை சரியாக்கி விடுவாயாக ; ஸஃதே ! உம் மீது எனது தாயும், தந்தையும் அர்ப்பணம் ஆகட்டுமாக என்று ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறுவார்கள். ஆக, நான் எந்த அம்பை எய்தாலும் ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அத்துடன் இவ்வாறு கூறிவந்தார்கள். அல்லாஹ்வே! அவரது குறியை சரியாக்கி விடுவாயாக. மேலும் அவரது துஆவை ஒப்புக் கொண்டு விடுவாயாக! எதுவரை என்றால், நான் எனது அம்பின் கூடையில் இருந்து அம்பை எய்து முடித்துவிட்டப் பிறகு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தமது அம்புக் கூடையிலிருந்து அம்பை விரித்து வைத்து விட்டார்கள். மேலும், எனக்கு ஓர் அம்பைக் கொடுத்தார்கள். மேலும் அதன் முன் பக்கம் கூரான முனையும் இருக்கவில்லை. மேலும் அதன் பின்புறத்திலும் சரியான முறையில் அதன் வடிவமும் இருக்கவில்லை. கூறுகின்றார்கள்: அந்த அம்பைக் கொடுத்தார்கள். மேலும், அந்த அம்பு மற்ற அம்புக்களைக் காட்டிலும் வேகம் மிக்கதாக இருந்தது.




அல்லாமா ஸஹ்ரீ (ரஹ்) அவர்கள் எழுதியுள்ளார்கள்: அந்த நாள் ஸஃது (ரலி) ஓராயிரம் அம்புகளை எய்திருந்தார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத் தொகுதி 4, பக்கம் 200 - 201, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் இது தொடர்பாக இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஸஃது பின் வகாஸ் அவர்களுக்கு சுயமே அம்பை எடுத்துக் கொடுத்து வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் அந்த அம்பை எதிரியின் மீது கடுமையாக எய்து கொண்டே சென்றார்கள். ஒருமுறை ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: உம் மீது எனது தாயும், தந்தையும் அர்ப்பணம்! நீர் தொடர்ந்து அம்பை எய்து கொண்டே செல்வீராக! ஸஃது (ரலி) அவர்கள் தமது வாழ்வின் இறுதி வரை இந்த சொற்களை மிகவும் பெருமிதத்துடன் எடுத்துரைத்து வந்தார்கள்.(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம். ஏ (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 495)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வகாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹுது போர் நாளன்று தமது அம்புக் கூடையிலிருந்து அம்பை எடுத்து எனக்காக விரித்து வைத்தார்கள். மேலும் நீர் அம்பை எய்துவீராக! உம் மீது எனது தாயும், தந்தையும் அர்ப்பணம் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.(ஸஹீஹ் புகாரீ, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 4055)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு ஏற்ப ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காலித் பின் வலீதுடைய தலைமையிலானக் குழுவின் தாக்குதலை மலையில் எவ்வாறு தோல்வியுறச் செய்தார்கள்?

இது குறித்து இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. அதாவது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளின் ஜமாஅத்துடன் அந்தக் குன்றில் அமர்ந்திருந்தார்கள். திடீரென குறைஷிகளின் ஒரு கூட்டம் மலையின் மீது வந்தடைந்து விட்டது. அந்தக் கூட்டத்தில்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 18 - 25 APR 2024 Issue No. 16 & 17

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

காலித் பின் வலீத் அவர்களும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரியை மேலே கண்டபோது இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ اِنَّهٗ لَا يَنْبَغِيْ لَهُمْ اَنْ يَّعْلُوْنَا، اَللّٰهُمَّ لَا قُوَّةَ لَنَا اِلَّا بِكَ

அல்லாஹ்வே! அவர்கள் எங்களை வெற்றிக் கொள்வது என்பது அவர்களுக்கு ஆகுமானதல்ல. அல்லாஹ்வே! எங்களுக்கு ஆற்றலும், வலிமையும் இல்லை. ஆனால், உன் மூலமாக மட்டுமே இருக்க வேண்டும். அப்பொழுதே ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்கள் முஹாஜிர்களின் ஒரு கூட்டத்தினருடன் அவர்களை எதிர்கொண்டார்கள். மேலும் அவர்களை பின்வாங்கச் செய்து மலையிலிருந்து கீழே இறங்கும்படி நிர்பந்தித்து விட்டார்கள். இந்த சம்பவம் தொடர்பாக அல்லாஹ்வின் இந்த வழிகாட்டல் இறங்கியது.

وَلَا تَهِنُوْا وَلَا تَحْزَنُوْا وَاَنْتُمُ الْاَعْلَوْنَ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ

(ஆலி இம்ரான்: 140)

பலவீனத்தை வெளிப்படுத்தாதீர்கள்; மேலும் கவலை கொள்ளாதீர்கள். நீங்கள் நம்பிக்கையாளர்களாயின் பின்னர் நிச்சயமாக நீங்களே வெற்றி பெறுவீர்கள்.

(ஸீரத்துல் ஹலபிய்யா, தொகுதி 2, பக்கம் 323, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குன்றை சென்றடைந்தபோது குறைஷிகளின் ஒரு குழு காலித் பின் வலீதுடைய தலைமையில் குன்றின் மீது தாக்குதல் தொடுக்க விரும்பியது. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு ஏற்ப ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சில முஹாஜிர்களை அழைத்துக் கொண்டு அக்குழுவினரை எதிர் கொண்டார்கள். மேலும் அவர்களை தோல்வியுறச் செய்து விட்டார்கள்.(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 497)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காயமுற்றப் பின்னரும் கூட ஸஹாபிகளைக் குறித்து கவலை கொண்டது தொடர்பாக ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உஹது போர் நாளைப் பற்றி குறிப்பிடும்போது அன்னார் (ரலி) இவ்வாறு கூறுவார்கள்: அந்த நாள் முழுவதும் தல்ஹா அவர்களின் நாளாக இருந்தது. பின்னர் அதன் விளக்கத்தை இவ்வாறு கூறுவார்கள்: உஹது போர் நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி திரும்பி வந்த நபர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். அப்போது நான் கண்டேன்: ஒருநபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அன்னாரைப் பாதுகாத்தவாறு போரிட்டுக் கொண்டிருந்தார். அறிவிப்பாளர் கூறுகின்றார்: அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனது கருத்துப்படி அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாத்துக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்தோ! நான் தல்ஹாவாக இருந்திருக்க வேண்டுமே! அந்த சந்தர்ப்பம் என்னிடமிருந்து கைநழுவி விட்டது. மேலும், அந்த நபர் எனது சமுதாயத்திலிருந்து ஒருவராக இருந்தால் அது எனக்கு மிகவும் விருப்பமானதாக இருக்கும் என்று நான் எனது உள்ளத்தில் கூறினேன்.

எவ்வாறு இருப்பினும் எனக்கும், இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்குமிடையில் ஒரு நபர் இருந்தார். அவரை என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஆனால், நான் அந்த நபரைக் காட்டிலும் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு மிகவும் அருகில் இருந்தேன். அவர் எவ்வளவு அதிகம் அம்பு எய்து கொண்டிருந்தார் என்றால், என்னால் அவ்வளவு அம்புகளை எய்த முடியாது. ஆக நான் பார்த்தேன். அவர் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களாக இருந்தார்கள். பின்னர் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் நான் சென்றேன். அன்னாருடைய கீழ்தாடைப் பற்கள் அதாவது முன்னால் உள்ள இரண்டு பற்கள் மற்றும் ஒன்பது கோரப்பற்களுக்கும் மத்தியில் இருக்கக் கூடிய பல் உடைந்து விட்டது. மேலும் முகம் காயமுற்று இருந்தது. அன்னார் (ஸல்) அருளுக்குரிய கன்னத்தில் போர்க் கவசத்தின் இரும்புத் துகள்கள் பதிந்து விட்டன. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இருவரும் உங்களது தோழருக்கு உதவி செய்யுங்கள். அன்னார் (ஸல்) இவ்வாறு கூறியதன் பொருள் தல்ஹாவுக்கு உதவி செய்யுங்கள் என்பதாக இருந்தது. அன்னாருக்கு இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது. என்னைக் கவனியுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுவதற்கு பகரமாக தல்ஹாவை சென்று பாருங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 4, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்) அவருடைய நிலை என்ன? அவர் பக்கம் சென்று பாருங்கள்; அவருடைய காயத்தை ஆற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸியாத் பின் ஸகன் மீதிருந்த அன்பு மற்றும் பரிவு மிக்க நடைமுறை மற்றும் அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த நேசத்தைக் குறித்தும் குறிப்பு கிடைக்கின்றது. இது தொடர்பாக இப்னு இஸ்ஹாக் (ரஹி) அவர்கள் எழுதியுள்ளார்கள். நிராகரிப்பாளர்கள் இறைத் தூதர் (ஸல்)அவர்களை சுற்றி வளைத்தபோது,


مَنْ رَجُلٌ يَّشْرِيْ لَنَا نَفْسَهٗ

என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். பொருள்: எமக்காக தன்னையே விற்று விடக் கூடிய நபர் யார்?. அப்போது, ஸியாத் பின் ஸகன் ஐந்து அன்ஸாரி ஸஹாபிகளுடன் எழுந்து நின்றார்கள். மேலும் அவர் உம்மாரா பின் யஸீத் பின் ஸகனாக இருந்தார் என்று சில மக்கள் கூறுகின்றனர். அப்போது இவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு முன்னால் மிகவும் தீரத்துடன் ஒவ்வொருவராக ஷஹீதாகிக் கொண்டே இருந்தார்கள். எதுவரையென்றால், அவர்களில் கடைசியானவராக ஸியாத் அல்லது உம்மாரா அவர்கள் இருந்தார்கள். இவர்கள் போர்புரிந்து கொண்டிருந்தார்கள். எதுவரையென்றால் அன்னாருக்கு பல காயங்கள் ஏற்பட்டன. பின்னர் முஸ்லிம்களின் ஒரு கூட்டம் திரும்பி வந்தது. மேலும், இணை வைப்பாளர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து பின்வாங்கச் செய்துவிட்டது. எனவே அதன் பிறகு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஸியாத் பின் ஸகம் அவர்களை எனக்கு அருகில் கொண்டு வாருங்கள்; அப்போது ஸஹாபா பெருமக்கள் அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் கொண்டு வந்துவிட்டார்கள். அன்னார் (ஸல்) தமது அருளுக்குரிய பாதத்தை அன்னாருக்கு தலையணையாக ஆக்கிவிட்டார்கள். மேலும் அவருடைய கன்னம் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய பாதத்தில் இருந்த நிலையில் அவருடைய மரணம்

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம்...

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad